விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 18 செவ்வாய்க்கிழமை (02.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
54 ஆண்டுகள் தரத்தில்
முதன்மையான சீமெந்து

# அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே அமைச்சரை அழைக்கிறது இந்தியா!

## புதுடில்லி தகவல்கள் கசிவு

(கொழும்பு) இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்புக்கு விஜயம் செய்வதற்கு முன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மூலம் கடுமையான செய்தி ஒன்றை கொழும்புக்கு அனுப்பவே அவரை இந்திய மத்திய அரசு அழைத்துள்ளதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் மீதான 2010 தடை செல்லும்

### சென்னை நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப்புலிகள இயக்கத்தின் மீதான தடை 2010 ஆம் ஆண்டு நீட்டிக்கப்பட்டது செல்லும் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தியாவில் விடுதலைப் புலிகள இயக்கம் 1991ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டது. அதன் பின்னர், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அத்தடை நீட்டிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 2010ஆம் ஆண்டு மே மாதம் தடையை நீட்டித்து மத்திய உள்துறை அமைச்சகம் பிறப்பித்த உத்தரவு செல்லும் என்று, அது குறித்து விசாரிக்கவென நியமிக்கப்பட்ட நீதிபதி விக்ரம்ஜித் சென் தலைமையிலான தீர்ப்பாயம் கூறியது.


ஆனால், அந்த முடிவினை எதிர்த்து சிறைவாசிகள் உரிமை மையத்தின் இயக்குநர் புகழேந்தியும் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

அவர்களின் மனுக்கள் மீதான விசாரணை கடந்த ஆண்டு மே மாதம் (20ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதார அபிவிருத்திக்கு இன்னமும் நேரம் தேவை

### ஜனாதிபதி தெரிவிப்பு

தேசிய ஒருமைப்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றோம். மோதல்களுக்கு பின்னர் எங்களுக்கு சவால்கள் இல்லாமல் இல்லை. ஆகையினால் எங்களுக்கு இன்னும் நேரம் தேவைப்படுகின்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



சர்வதேச சமூகமானது தமது ஒருமைப்பாட்டு செயன்முறைகளை இந்தநேரத்தில் இலங்கைக்கு கொடுக்கமுடியும். அவ்வாறு செய்தால் அதுவே சிறந்த உதவியாக இருக்கும் என்றும் ஜனாதிபதி மேலும் (19ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிவாசல் உடைப்பு

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள மீள்குடியேற்றக் கிராமமான நாவலடி கிராமத்தில் மஸ்ஜிதுல் அந்நூர் பள்ளிவாசல் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இரவு நேரத் தொழுகை முடிந்தவுடன் பள்ளிவாசல் மூடப்பட்டுவிட்டது.

நேற்று அதிகாலை தொழுகைக்காக காலை 4 மணியளவில் பள்ளிவாசலில் கடமை செய்பவர், அங்கு சென்றபோது பள்ளிவாசல் உடைந்து காணப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, பள்ளிவாசலில் உள்ளே இருக்கும் உண்டியலும் வெளியில் இருக்கும் உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் எடுக்கப்பட்டுள்ளதுடன் அலுமாரி உடைக்கப்பட்டு அதிலிருந்த பொருட்களை வெளியே வீசியுள்ளனர் என்று இப்பள்ளிவாசலில் கடமை புரியும மௌலவி எச்.எம்.இர்பான் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பிராந்திய பாதுகாப்பில் இலங்கையுடன் இணைய பாகிஸ்தான் விருப்பம்

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது தம்மால் வழங்கப்பட்ட உதவிகளைப் போன்று, தேவையான அனைத்து உதவிகளையும் எதிர்காலத்திலும் பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கும் என அந்நாட்டு படைத்தளபதி ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கயானி தெரிவித்துள்ளார்.

"இரு நாடுகளுக்கும் இடையிலான படைத்துறை சார்ந்த ஒத்துழைப்புக்களை அதிகரித்து பிராந்தியப் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் இலங்கையுடன் பாகிஸ்தான் ஒன்றிணைந்து செயற்பட விரும்புகின்றது. இவ்விரு நாடுகளுமே உள்ளக சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. அதே போன்று சமாதானத்தையும் விரும்புகின்றன. ஆகவே தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மை ஆகியவற்றை பாதுகாத்துக் கொண்டு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்புக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் (20ஆம் பக்கம் பார்க்க)

## றெமிடியஸ் சு.கவுடன் இணைவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் முடியப்பு றெமிடியஸ் தனது மாநகர சபை உறுப்பினர் பதவி மறறும் கட்சியின் உறுப்பினர் பதவி ஆகியவற்றை இராஜினாமா செய்வதாக நேற்று அறிவித்ததோடு எதிர்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படப் போவதாகவும் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநகர சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## நிதி அமைச்சின் செயலருக்கு அழைப்பு

(கொழும்பு)

நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தரவை எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

400 கோடி ரூபா வற்வரி மோசடி வழக்கு தொடர்பில் தற் போது விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர் ஒருவர் நேற்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வற் வரி மோசடி வழக்கு தொடர்பில் சாட்சியம் பெறுவதற்கே பீ.பி. ஜயசுந்தரவை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஏ-11)

## பிரமுகர்களின் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகிறது

நாட்டின் முக்கிய பிரமுகாகளின் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்படுகின்றதா என்பது குறித்து உயர் மட்ட விசாரணை நடத்தப்பட உள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனது தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டதனைப் போன்றே, முக்கிய பிரமுகாங்களின் தொலைபேசி உரையாடல்களும் ஒட்டுக் கேட்கப்படுகின்றன.

இதனால் எதிர்வரும் காலங்களில் தேசியப் பாதுகாப்பை கருத்திற் கொண்டு புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

எனது செல்லிடப்பேசியின் உரையாடல்களை வெளிநாட்டு நிறுவனமொன்று இரகசியமாக ஒட்டுக்கேட்டு வருவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இது தொடர்பில் விசாரணை நடத்து (20ஆம் பக்கம் பார்க்க)

## நிசாந்தன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சி.நிஷாந்தன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று மதியம் 12.30 மணியளவில் தனது கட்சி அலுவலகத்துக்கு முன்பாக நிசாந்தன் தனது மோட்டார் சைக்கிளோடு நின்று கொண்டிருந்தபோது, நபரொருவர் நிசாந்தனைத் தாக்கிவிட்டு அவரது மோட் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தறையில் சிவப்பு மழை

மாத்தறை நாதுகல பிரதேசத்தில் நேற்று காலை சிவப்பு மழை பெய்துள்ளது. நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களிலும் தொடர்ந்து மழை பெய்து வருகின்ற நிலையில் மாத்தறை பிரதேசத்தில் சிவப்பு மழை பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் கீழ்க்குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப் படுகின்றன.

1.விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

2.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 05.07.2013 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்(தொலைபேசி இல. 021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.07.2013 முதல் 24.07.2013 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 25.07.2013 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 25.07.2013 திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும்.

6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லு படியாகும் விதத்திலும் கேள்விப் பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை(ரூ) | மீளளிக்கப் படாத தொகை(ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JK/ADM/ 03/ CONS. WORK/ 2013(I) | யாழ்ப்பாண பிரதேச செயலக நிர்மாண வேலை - பகுதி III | 10.98 | 05 மாதம் | C5/C6 | 110,000.00 | 1000.00 |
| JK/ADM/ 03/ CONS. WORK/ 2013(II) | சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்மாண வேலை-பகுதி VII | 02.03 | 05 மாதம் | C5/C6 | 20,300.00 | 1000.00 |
| JK/ADM/ 03/ CONS. WORK/ 2013(III) | யாழ்ப்பாண மாவட்ட செயலக நான்கு மாடிக் கட்டிட நிர்மாண வேலை-பகுதி III | 11.77 | 05 மாதம் | C5/C6 | 118,000.00 | 1000.00 |

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.
(C-3836)

# ஆளுநர் அலுவலகத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆரம்பப் பாடசாலை ஒன்றின் மாணவி ஒருவரை ஆசிரியை ஒருவர் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புபடுத்தி கடந்த 29.06.2013 அன்று வலம்புரியில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் குறிப்பிடுவது போல,

குறித்த ஆசிரியையின் இடமாற்றத்திலோ அல்லது மாணவி தாக்கப்பட்டது தொடர்பிலான விசாரணைகளிலோ வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் எந்த விதத்திலும் தொடர்புபட்டிருக்கவில்லை என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா அறிவித்துள்ளார்.

அவர் விடுத்த செய்திக் குறிப்பில், குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மனிதவுரிமை ஆணைக் குழுவினரே விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் இச்சம்பவத்துடன் ஆளுநர் அலுவலகம் எந்த வகையிலும் தொடர்பு பட்டிருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ந)

# பிரபாகரனைப் பார்த்து கட்டியணைத்தார் மரடோனா

சர்வதேச கால்பந்தாட்ட நட்சத்திரம் டியாகோ மரடோனா விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தீவிர ரசிகர் என்ற பரபரப்பான தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

மரடோனா என்ற பெயரைக் கேட்டாலே உலககெங்கும் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வார்கள்.

உலகின் எந்த நாட்டுக்கு எந்தவொரு குக்கிராமத்திற்குச் சென்றாலும் அவரைப் பார்ப்பதற்காக ஒரு பெருங்கூட்டம் அலைமோதும்.

அப்படிப்பட்ட மரடோனா அண்மையில் இந்தியாவிற்கு சென்றிருந்தார். அன்றைய தினம் இரவு நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்த போது வெளியில் பலமான குரல்களைக் கேட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தவர் தனது இரசிகர்கள் தான் தன்னைப் பார்ப்பதற்காக அங்கே குழுமி நின்று குரல் எழுப்பிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

அவர்களுக்கு தனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காக அந்த இரவு வேளையிலும் மாடியில் இருந்து கீழே இறங்கி வந்தார். வாசலில் காவலுக்கு நின்று கொண்டிருந்த ஒரு காவலருக்கு கைகொடுத்தவர் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டார். அவர் கேட்டது அந்தக் காவல்துறை அதிகாரிக்குப் புரியவில்லை.

அவரது சீருடையில் குத்தியிருந்த பெயரை வாசித்த மரடோனா சட்டென்று உற்சாகமாகி அவரைக் கட்டியணைத்துள்ளார். பின்னர் தனது தோள் பட்டையில் பச்சை குத்தியிருக்கும் புரட்சி வீரன் சே குவேராவின் படத்தை அந்தக் காவல்துறையினருக்குக் காட்டியுள்ளார். அந்த காவல்துறையினரின் சீருடையில் பொறிக்கப்பட்டிருந்த பெயர் பிரபாகரன்!

அந்தப் பெயருக்காகவே அவரைக் கட்டியணைத்துள்ளார் மரடோனா.

சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் எந்தளவு பிரபலமாக இருக்கின்றார் என்பதற்கு இந்தச் சம்பவம் இன்னொரு எடுத்துக்காட்டு என்பதாக அங்கு கூடி நின்றவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ-11)

# ஐந்துபேருக்கு மரணதண்டனை

கொலைக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஐவருக்கு மொனராகலை மேல் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

பிபில மெதகம டீ.எம்.மஹிந்த என்பவரை 2002-ம் ஆண்டு ஒக்டோபர் 15 கடத்திச் சென்று வெட்டிக் கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்தே மொனராகலை மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் எச்.குலதுங்க இந்த ஐவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (எ-11)


செல்லா சினிமா யாழ்ப்பாணம்
A/C
சிவா, பிரகாஸ்ராஜ் மற்றும் பலர் நடித்த
காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30
இலங்கை இந்திய ஒரே தின வெளியீடு

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail: valampurii@yahoo.com

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-3838)

பிள்ளையார் இன்
12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.
சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-
தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(C-3839)


சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகரின் கொடியேற்றத் திருவிழா
நாளை (03.07.2013) நேரம் : மு.ப. 11 மணியளவில்
குறிப்பு: ஆலய தர்மகர்த்தா வைரமுத்து ஆறுமுகம் (பெரிய பரிகாரியார்) அவர்களின் சிலை திறப்பு வைபவம் பி.ப 1 மணியளவில் நடைபெறும்.
திறந்து வைப்பவர் : உயர்திரு.த.விக்னராஜா அவர்கள்
(முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி)
சோழியூரான் பிறை சூடிக் குரு
(3157)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நாம் படைப்பதுதான் சொர்க்கமும் நரகமும்

ஒரு கோயிலில் பெரியவர் ஒருவர் ஆன்மீகச் சொற்பொழிவொன்றை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

அவரது சொற்பொழிவில் கடவுள், சொர்க்கம், மனிதன் ஆகியவை பற்றி விபரமாகப் பேசினார். அனைவரும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் ஒரு தத்துவஞானியும் அமர்ந்திருந்தார். அவர் சொற்பொழிவாளருடைய நண்பர்.

சொற்பொழிவாளர் சொற்பொழிவை நிறைவு செய்ததும் அந்தப் பெரியாரிடம் விரைந்து, ''எப்படி இருந்தது என் பேச்சு?'' என்று வினவினார்.

அதற்கு தத்துவஞானி, ''நீங்கள் பேசியவை ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தது'' என்றார்.

''என்ன முரண்பாடு?'' என இவர் கேட்டார்.

''கடவுளை நம்புபவன் சொர்க்கத்திற்குச் செல்வான் என்று முதலில் நீங்கள் கூறுனீர்கள். அதே நேரம் நல்லவனாக வாழ்பவன் சொர்க் கத்திற்குப் போவான் என்றும் சொன்னீர்கள்'' என்றார்.

''ஆமாம்! அதிலே என்ன முரண்பாடு கண்டீர்கள்?'' என்றார் பெரியவர்.

தத்துவஞானி அமைதியாக, ''இந்த உலகத்தில் ஒருவன் எல்லாத் தப்பும் செய்து கொண்டே, கடவுளை நம்பினான் என்றால் அவன் சொர்க்கத்திற்குப் போவானா? அல்லது தவறு ஏதும் செய்யாமல் ஒழுங்காக வாழ்ந்து இறைவனை நம்பாமல் இருக்கிறவன் நரகத்திற்குப் போய் விடுவானா?

''கடவுள் நம்பிக்கையே இல்லாத ஒரு நல்லவன் என்ன செய்வான்? எங்கே போவான்? இவ்வுலகில் கடவுள் நம்பிக்கையோடு வாழ்வது முக்கியமா? அல்லது நல்வனாக வாழ்வது முக்கியமா?'' என்று கேட்டார். இவை அனைத்தும் கேட்டதும் அந்தப் பெரியவர் குழப்பம் அடைந்தார்.

தத்துவஞானி கூறியதும் நியாயம் தானே; கடவுளை நம்புபவன் சொர்க்கத்திற்குச் செல்வான் என்றால், அமைதியாக கடவுளை நம்பிக் கொண்டு, இந்த உலகில் அனைத்து விதமான பிழைகளையும் செய்து கொண்டே இருந்து விடலாமா?

பேச்சாளர் குழப்பத்துடனேயே வீட்டிற்குச் சென்று தூங்கி விட்டார்.

அவர் தூங்கியபோது அவருக்கு ஒரு கனவு வந்தது.

கனவில் அவர் ஒரு புகையிரதத்தில் சென்று கொண்டிருந்தார். எதிரில் அமர்ந்திருப்பவரைப் பார்த்து ''நாம் இப்போது எங்கே போகிறோம்?'' என்று கேட்டார்.

''சொர்க்கத்திற்குப் போகிறோம்?'' என்று எதிரில் இருந்தவர் பதிலளித்தார்.

புகையிரதம் ஓரிடத்தில் நின்றது. அந்த இடம்தான் சொர்க்கம் என்று நினைத்து இவர் இறங்கினார். ''இங்கே கௌதம புத்தர் இருப்பார்; சோக்ரடீஸ் இருப்பார்; அவர்களைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் இது'' என்று நினைத்து அவர் சுற்றிலும் பார்த்தார்.

ஒரே பாலைவனம் போல் காட்சியளித்தது. பச்சை பசுமைக்கே இடம் இல்லை. எங்கு பார்த்தாலும் பொட்டல் காடு. ஒரு சில இடங்களில் எலும்பும் தோலுமாக சிலர் அமர்ந்திருந்து தியானம் செய்து கொண்டி ருந்தார்கள்.

அவர்களிடம் போய் இவர் ''புத்தர், சோக்ரடீஸ் இவர்கள் எல்லோரும் எங்கே இருக்கிறார்கள்?'' என்று ஆவலுடன் வினவினார்.

''அப்படி யாரும் இங்கே இல்லையே...'' என்று அவர்கள் பதிலளிக்க, இவர் ஓடி வந்து புகையிரதம் நின்ற இடத்தை அடைந்தார்.

நரகத்திற்கு செல்வதற்கு ஒரு புகையிரதம் ஆயத்த நிலையில் நின்றது. இதில் அவர் ஏறி அமர்ந்து கொண்டார்.

புகையிரதம் வேகமாகப் புறப்பட்டது. எங்கு பார்த்தாலும் நீரோடைகள், நீர் நிலைகள், நந்தவனங்கள், மலர்கள், பறவைகள் கூட்டம் தென்பட்டன.

அங்கே இருந்தவர்கள் ஒரே ஆனந்தக் களிப்பில் திளைத்திருந்தார்கள். சொர்க்கத்தில் காணாத சிலர், இங்கு நரகத்தில் இருப்பதைக் கண்டார்.

இவை அனைத்தையும் பார்த்த இவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ''இது என்ன நரகம் தானா?'' என்று யோசித்துக் கொண்டு புகையிரதத்தை விட்டு இறங்கினார். அருகில் இருந்தவர்களிடம் விசாரித்த போது, இது நரகம்தான் என்று அமைதியாகப் பதில் வந்தது.

''எனக்கொரு சந்தேகம், புத்தரும் சோக்ரடீசும் லாவோட்சுவும்- இவர்களைப் போன்ற இன்னும் பலரும் (உருவக்) கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். அவர்கள் எல்லாம் இங்கே எப்படி வந்தார்கள் என்பதுதான் எனது சந்தேகம்'' என்று தன் குழப்பத்தை அவர்களிடம் கூறினார்.

அதற்கு அங்கிருந்தவர்கள் ''ஐயா இப்போது இங்கே நீங்கள் பார்க்கும் அனைத்து விடயங்களும் மேற்கூறியவர்கள் போன்ற மற்ற மகான்களும் இங்கே வர ஆரம்பித்த பின்னர்தான் உண்டாக ஆரம்பித்தன.

''இந்தப் பிரதேசத்தையே அவர்கள் மாற்றி விட்டார்கள். இங்கே இருப்பவர்கள் யாரும் சொர்க்கத்திற்குச் செல்வதற்கு விரும்புவதில்லை'' என்று கூறினார்கள்.

இந்தக் கதையின் மூலம் நாம் ஒன்றை விளக்கிக் கொள்ள வேண்டும். அதாவது... நல்லவர்கள், எங்கே இருக்கிறார்களோ, அந்த இடம் சாதாரணமான இடமாக இருந்தாலும், ஏன் நரகமாக இருந்தாலும் கூட அதுவே சொர்க்கமாக மாறி விடுகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# நல்லூர் கந்தன் உற்சவம் தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் ஓகஸ்ட் மாதம்ஆரம்பமாவுள்ளநிலையில்அதன் முன்னேற்பாட்டு கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.மாநகர சபை கேட்போர் கூடத் தில் கடந்த 29 ஆம் திகதி இடம் பெற்றது.

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி தேர் உற்சவமும் 5ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெற்று 6 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் திருவிழா நிறைவு பெறவுள்ளது.

இதன்போது கோவிலின் உற்சவ காலத்தையொட்டி முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதில் போக்குவரத்து, கோவிலின் சுற்றுச் சூழலின் சுத்தம், சுகாதாரம், பூசை நேரங்கள், உணவு மற்றும் அழகு சாதனம் உள்ளிட்ட கடைத் தொகுதிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்ட அதேவேளை ஊடக நிறுவனங்களின் இடம், ஒதுக்கீடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மேலும் ஊடகவியலாளர்கள் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் வெளி வீதியில் நின்று தமது கடமைகளை மேற்கொள்ளலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கோவிலுக்குவருகை தரும் பக்தர்களின் போக்குவரத் தை கருத்திற்கொண்டு இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகளின் சேவைகளை நேரநீடிப்பு செய்வது தொடர்பில் வேண்டுகோள் விடுக்கப் பட்டது.

அத்துடன் சத்திரச்சந்திப் பகுதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையை வேறொரு இடத்திற்கு இடமாற்றுவது தொடர்பாகவும் குறித்த பகுதியில் சமிக்ஞை விளக்குகளை பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் பேசப்பட்டது.

இதனிடையே கோவிலின் வருடாந்த உற்சவத்தை சிறப்பாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் வருகை தந்தோரிடம் அமைச்சர் அபிப்பிராயங்களையும் ஆலோ சனைகளையும் கேட்டறிந்தார்.

இதில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், நல்லைஆதீனகுருமுதல்வர்ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சின்மயா மிசன் சைதன்ய சுவாமிகள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் இதில் கலந்து கொண்டனர். (அ-6)

# மேலதிக பதிவாளர் நாயகமாக மீண்டும் நியமனம்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மேலதிக பதிவாளர் நாயமாக ந.சதாசிவஐயர் மீண்டும் நியமனம் பெற்றுள்ளார். இதன்படி கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அவர் மீள் நியமனம் பெற்று கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் மேலதிக பதிவாளர் நாயமாக கடமையாற்றி கடந்த 2010 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற இவர் 2011 ஆம் ஆண்டில் மீள் நியமனம் பெற்று ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் மீண்டும் இம்முறை இவ்வாறு மீள் நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

(நவாலி)

நவாலி சென். பீற்றர்ஸ் சனசமூக சங்க வளர்ச்சிக்கான சீட்டிழுப்பு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தில் நடைபெறமாட்டாது என சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி சீட்டிழுப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 20 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 60 | 120 | 120 |
| தக்காளி | 120 | 120 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 40 |
| கோவா | 130 | 100 | 120 | 120 |
| கரட் | 100 | 100 | 40 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 60 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 140 | 160-200 | 130-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 180 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 60 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 30-70 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | — | 100 |
| பயற்றங்காய் | 40 | 40 | 50 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 140 |
| பீற்றூட் | 100 | 60 | 100 | 120 |
| கறிமிளகாய் | 100 | 120 | 140 | 150 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 300 | 200 |
| போஞ்சி | 140 | 100 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 10 | 20 | — |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

# இராசி பலன்

02.07.2013
(ஆனி 18, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
தசமி பின்னிரவு 4.50 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 9.57 மணிவரை
இராகுகாலம் 2.56-4.26 மணிவரை
சுபநேரம் 10.26-11.56 மணிவரை
அமிர்தசித்தம்

**மேடம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலையை செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு உட்பட நேரிடலாம், செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பண வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தலைமைப்பொறுப்புக்கள் தேடி வரலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும், வாக்குறுதியை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், பயணங்களால் பலனுண்டு, தடைப்பட்ட காரியங்கள் இன்று கைகூடும்.

**கன்னி** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது, அலைச்சல்கள் அதிகரிக்கும், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்** நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், பொதுநல ஈடுபாடு கூடும், களஸ்திர நன்மையுண்டு, கௌரவமான நாள், திடீர் பயணங்களால் அனுகூலம் கிட்டும்.

**விருச்சிகம்** பணத் தேவைகள் பூரத்தியாகும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், உடன்பிறப்புக்கள் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவர்.

**தனுசு** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதுரியமாக செயற்பட்டு பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறலாம், வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்,

**கும்பம்** பொன்னான நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், கூட்டு முயற்சி வெற்றி தரும், அந்நியர் சந்திப்பால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். செயலகத்தில் முறைப்பாட்டு பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் பொது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்வதற்கு தனியான பிரிவொன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்வதற்கு இதுவரை காலமும் போதுமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் அதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்தப் புதிய பிரிவு யாழ். மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற யாழ். சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தினால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய இந்த புதிய பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்களில் அதிகாரிகள் செய்யும் தவறுகள், உரிய காலப்பகுதியில் பொதுமக்களுக்கான சேவைகளைச் செய்யாது ஏமாற்றுதல், இலஞ்சம் பெறுவது, சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவது தொடர்பான பல முறைப்பாடுகளை இந்த பிரிவின் ஊடாக பொதுமக்கள் மேற்கொள்ள முடியும்.

மேலும் முறைப்பாட்டாளர்கள் தமது பெயரையோ அல்லது தமது முகவரியையோ பதிவு செய்யாது எழுத்து மூலம் தமக்கு ஏற்படும், ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும்.

அத்தோடு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த முறைப்பாட்டு பிரிவு ஊடாக விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)







# சுயதொழில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைத் திணைக்களத்தினால் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு சுயதொழில் முதலாம் கட்ட நிவாரணக் கொடுப்பனவுக்காக 67 ஆயிரத்து 500 ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆ.ஶ்ரீகரன் அறிவித்துள்ளார்.

இதன்படி பயனாளி ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. கொடுப்பனவு பெறும் பயனாளிகளின் விபரம் வருமாறு,

விஜயபாலா கமலா (இராஜகிராமம்), சற்குராஜா ஜெயகலா (கரவெட்டி வடக்கு), இராஜேஸ்வரன் புனிதவதி (கரவெட்டி வடக்கு), நல்லையா சாந்தகுமாரி (கரணவாய் தெற்கு), யோகேஸ்வரன் யோகலட்சுமி (கரணவாய் மேற்கு), மகேஸ்வரி ஆனந்தராசா (மண்டான்), ஜெயராசா கிருஷ்ண பவானி (மண்டான்), துரைசிங்கம் தெய்வானை அம்மா (துன்னாலை), கதிரன் சுலொசனா (மண்டான்). (அ-2)

# கசூரினா கடற்கரையை அண்டிய பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை

(யாழ்ப்பாணம்)

**யாழ். காரைநகர் கசூரினா கடற்கரையை அண்மித்த பனை மரக்காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மதுபான விற்பனை நடைபெறுவதோடு பெருமளவான இளைஞர்கள் அங்கு சென்று மது அருந்திவிட்டு சமூக சீர்கேடான செயல்களில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் காரைநகர் பிரதேச செயலாளர் மேலும் தெரிவிக்கையில், நீண்ட காலமாக காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதியிலுள்ள பனை மரங்கள் நிறைந்த பற்றைக் காட்டுப்பகுதிக்குள் சட்டவிரோதமாக மதுபான விற்பனை நடைபெற்று வருகின்றது.

இதனைத் தடுப்பதற்கு பல வழிகளில் நடவடிக்கை எடுத்தபோதும், இத்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவரின் தலைமையில் இடம்பெற்று வரும் இந்த மதுபான விற்பனை நடவடிக்கையால் பெருமளவான இளைஞர்கள் மது போதைக்கு அடிமையாகி வருகின்றனர். அத்தோடு மதுபோதையில் கலாசார சீர்கேடுகளிலும் ஈடுபடுகின்றனர்.

இதுதவிர சுற்றுலாவுக்காக கசூர்னா கடற்கரைக்கு வரும் பயணிகளுடனும் அநாகரிகமான முறையில் நடந்து கொள்கின்றனர்.

இச்சம்வங்கள் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டால், பொலிஸார் அங்கு வருவதற்குள் இளைஞர்கள் தப்பித்து ஓடி விடுகின்றனர்.

இச் செயல் நன்கு திட்டமிட்டு ஒரு குழுவாக சேர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி விடயம் குறித்து யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற யாழ். சிவில் பாதுகாப்புக்கு குழுக் கூட்டத்திலும் பிரதேச செயலரினால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# மயிலிட்டிக்கு ஆயிரம் பேர் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதிக்குள் ஆயிரம் பேர் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இன்று செவ்வாய்க்கிழமை 30 பேர் மயிலிட்டி பகுதிக்கு சென்று அங்குள்ள ஆலயங்களை அண்டிய பகுதியில் துப்புரவு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.


மேற்படி விடயம் குறித்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கையில்,

யாழ். வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்கு உட்பட்ட மயிலிட்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் சென்று பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி குறித்த பகுதியில் நடைபெறவுள்ள ஆலயத் திருவிழாவிற்கு செல்ல அனுமதி பெற்றுத் தருமாறு என்னிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த கோரிக்கை தொடர்பில் நான் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியதோடும் மக்கள் சார்பாக கோரிக்கையும் விடுத்தேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க குறித்த பகுதிக்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ள ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங் கியுள்ளது.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை ஆலயத் துப்புரவு பணிகளுக்காக 30 பேர் மயிலிட்டிப் பகுதிக்குச் செல்லவுள்ளதோடு எதிர்வரும் 5 ஆம் திகதி மயிலிட்டியை சேர்ந்த ஆயிரம் பேர் தங்கள் பகுதிக்குச் சென்று அங்குள்ள ஆலயங்களில் வழிபாடுகளை செய்யவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-6)









ஆனைக்கோட்டை ஶ்ரீகண்ணகை அம்பாள் என வழங்கும் ஶ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மாணவர்களிடையே சைவசமய போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. இதில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபமும் கலைநிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மங்கல விளக்கேற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கை நெறிகள் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் ஒரு பகுதி மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் ஒரு இலட்சம் மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்பை இழக்கின்றனர்

வருடாந்தம் ஒரு இலட்சம் மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பை இழக்கின்றனர்.

வருடாந்தம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் உயர் கல்வியைத் தொடரும் சந்தர்ப்பத்தை இழப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்க பல்கலைக் கழகங்களில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களினால் கூடுதலான மாணவர்களுக்கு உயர் கல்வியைத் தொடர சந்தர்ப்பம் அளிக்க முடியாதுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வருடாந்தம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மாணவ, மாணவியர் உயர் கல்வியைத் தொடர தகுதி பெற்றுக் கொள்கின்ற போதிலும் இவர்களில் 25 ஆயிரம் மாணவ, மாணவியர் மட்டுமே அரச பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார்.

பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற ரீதியில் இந்த பிரச்சினையை உதாசீனம் செய்ய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உயர் தரத்தில் சித்தியெய்தும் சொற்பளவிலான மாணவ, மாணவியர் மட்டுமே தொழிற் கல்வியைத் தொடர்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே தனியார் பல்கலைக்கழகங்கள் பட்டப் படிப்பை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சந்தர்ப்பம் அளித்துள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# யாழில் கடற்றொழில் திட்டத்திற்கு 58 மில்லியன் ரூபா ஒதுக்க முடிவு

(கொழும்பு)

யாழ்.தீபகற்பத்தில் கடற்றொழில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 58 மில்லியன் ரூபாவை வழங்க அவுஸ்திரேலிய அரசு தீர்மானித்துள்ளது.

சர்வதேச புலம்பெயர்வோர் அமைப்பு இதனை வழங்கும். இதன் மூலம் 30 ஆண்டுகளாக யுத்தத்தாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலுக்கு புதிய உத்வேகம் கிடைக்குமென இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய அலுவலகம் தெரிவித்துள்ளது. புனரமைக்கப்பட்ட பாஷையூர் நங்கூரத் தளத்தை அவுஸ்திரேலிய தூதுவர் றொபின் மூடி கடற்றொழில் நீரியல்வள அமைச்சிடம் அண்மையில் கையளித்தார்.

புனரமைப்பின் பின் வேண்டிய நேரத்தில் நங்கூரத் தளத்துக்கு படகுகளை உட்பிரவேசிக்கச் செய்ய வசதியுண்டு.

700 குடும்பங்கள் இதனால் நன்மை பெறும். சர்வதேச புலம் பெயர்வோர் அமைப்பு இத்திட்டத்தை முகாமை செய்யும்.

கடற்றொழில் கூட்டுறவு சமாசம், சமூக அடிப்படை அமைப்பு, இலங்கை கடற்படை, கடற்றொழில் திணைக்களம், யாழ்.மாநகர சபை உட்பட பல தரப்பினர் இத்திட்டத்தில் பங்கேற்றுள்ளனர். (அ-2)


## மதன் எலக்ரோனிக்ஸ்

- சகல வகையான LCD, LED CRT TVகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் யாவும் சிறந்த முறையில் காலதாமதம் இன்றி திருத்திக் கொடுக்கப்படும்.
- LCD, LED CRT TV களுக்குரிய உதிரிப்பாகங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



சுதுமலைச் சந்தி
மானிப்பாய்.
தொ.பே: 0776479299
0770648448
0774685498
(சி/3825)


# பொதுபலசேனாவின் எச்சரிக்கை

சிங்களவர்கள் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டாம் என பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்டு நாயக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்கள் தற்போது அவர்களின் இனத்தை கட்டியெழுப்பி, வர்த்தகம் உட்பட அனைத்து துறைகளிலும் மிகவும் சூட்சுமான முறையில் தமது விரிவு படுத்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஊடாக உலக இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு நாட்டை கொண்டு செல்ல அவர்கள் திட்டமிட்டுள்ளனர். எனவே, சிங்களவர்கள் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டாம்.

அத்துடன், முஸ்லிம் வர்த்தகத்தை பகிஷ்கரிக்குமாறும் முஸ்லிம் மருத்துவர்களை நிராகரிக்குமாறும் ஞானசாரதேரர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)




## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட் கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே

என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமானதாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன் நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்தடுத்து மூன்று நாட்களுக்கு இந்த ஜெபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும் இந்த ஜெபத்தை பிரசுரிப்பதாக வாங்குப் பண்ணவும்.

செ.நிறஞ்சனா

(சி-3831)


## உடுப்பிட்டி உலகாட்சகருக்கு திருவிழா

உடுப்பிட்டி உலகாட்சகர் ஆலய வருடாந்த திருநாள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 5 ஆம் திகதி வரை மாலைத் திருப்பலிகள் 5.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறவுள்ளது. (அ)


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து(KO)
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா : 13
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:BCom வங்கி முகாமையாளர்
தொ.இ:B636

பிறப்பு: 1975 இந்து(Na)
நட்சத்திரம்: பரணி2 செவ் 2உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: BAAGA Office
தொ.இ:B637

பிறப்பு: 1980 இந்து(V)
நட்சத்திரம்:மகம்1
கி.பா : 29.75
தகைமை/தொழில்: A/L நகை வியாபாரம் சொந்தம்
தொ.இ:B638

பிறப்பு: 1979 இந்து(V)
நட்சத்திரம்: அனுசம்
கி.பா : 41
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:BA, MSC (Student)Dispenser அரச
தொ.இ:B639

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து(V)
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா :20.75 செவ் 12
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்:BAபட்டதாரி பயிலுனர்
தொ.இ:G860

பிறப்பு: 1985 இந்து (V)
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா :34.25 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G863

பிறப்பு: 1979 இந்து(V)
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 28 செவ் 1
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: HNDA, BCom,AATDevelopment Assistant
தொ.இ:G864

பிறப்பு: 1969 இந்து(V)
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா : 20.25
உயரம்: 5' 2"
தகைமை/தொழில; A/L
தொ.இ: G875

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



## ஆசி தந்தருள்க! அரசியல் மதிநுட்பத் தந்தையே!





வடமராட்சி கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், வடமராட்சி பிரதேச அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோருடன் நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களைப் படத்தில் காணலாம்.

(சி/3820) நிரந்தர நியமனம் பெற்ற வடமராட்சி கிழக்கு தொண்டராசிரியர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் மூளையில் பதியப்படும் முறை முப்பரிமாண வடிவில் காணொளியாக!


## வியப்பில் ஆழ்த்தும் கண்டுபிடிப்பு



மனித மூளையில் நினைவுகள் எவ்வாறு பதிவாகின்றன என்ற கேள்வி தான் மருத்துவ உலகின் மில்லியன் டொலர் கேள்வியாக இதுவரை இருந்தது.

நியூத்திரன்களின் உதவியோடு நினைவுகளை சேமித்து வைத்து கொள்கிறது மூளை. இதில் சிக்கலான நரம்பு முனைகளின் வலைப் பின்னலை நேரடியாக கண்டறிய முடியாது மருத்துவ உலகம் திணறி வந்தது.

தற்போது அதற்கு விடை கிடைக்கும் வகையில் அமெரிக்க விஞ்ஞானி ஏடொன் அனோல்ட் தலைமையில் விஞ்ஞானிகள் குழு செய்த ஆய்வில் மூளையில் நினைவுகள் எவ்வாறு பதிவா




கின்றன என்பதை முப்பரிமாணம் படமாக எடுத்துக் காட்டி சாதனை படைத்துள்ளனர்.

நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஜாக் ஜிஸ்டாக் மற்றும் டாக்டர் ராபர்ட் ஆகியோர் கண்டறிந்த எம்.ஆர்.என்.டிஸ்ப்ளேஎன்றதொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்க விஞ்ஞானிகள் குழு இந்த முப்பரிமாண படத்தை வெளியிட்டுள்ளனர். நாம் பொதுவாக எதையாவது புதிதாக கற்கும் போதோ பார்க்கும் போதோ நினைவுகள் மூளையில் பதிவாகும் போதோ அல்லது சேமிப்பிக்கப்பட்ட நினைவுகளை மீண்டும் நாம் நினைவு கூரும் போதோ மூளையில் உடல் ரீதியாக மாற்றங்கள் ஏற்படும். இதை கணக்கில் கொண்டு இந்த தொழில் நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

நினைவுகள் மூளைக்குள் சென்று பதிவாகும் போது மூளைக் குள் அனுப்பப்படும் ஒருவித இரசாயனம் ஒளிர தொடங்குகிறது. அவ்வாறு ஒளிர்வதை கணனி தொழில்நுட்பத்தின் மூலம் முப்பரிமாண படமாக எடுக்க முடியும் என்று விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

தற்போதைய இந்த கண்டு பிடிப்பு மூளை மற்றும் நரம்பியல் தொடர்பான மருத்துவத் துறையில் ஒரு உச்சக்கட்ட சாதனை என்றே கருதப்படுகிறது.

இந்த தொழில் நுட்பத்தின் மூலம் மூளையில் நினை வுகள் எவ்வாறு பதிவாகின்றன. எங்கு சேமிக்கப்படுகின்றன என்பதை ஆய்வு செய்ய முடியும் என்று விஞ்ஞானி கள் கூறியுள்ளனர்.



# எயிட்சையும் மீறி அச்சுறுத்துகிறது கொனோரியா



இதுநாள் வரை மனிதர்களை எயிட்ஸ் எனும் நோய்தான் மிரட்டி வந்துள்ளது. அதற்கு ஓரளவு மருந்து கண்டுபிடித்து விட்ட நிலையில் உடலுறவு மூலம் பரவுகின்ற மற்றொரு நோயான வெட்டை நோய்




ஆங்கிலத்தில் கொணோரியா (Gonorriea) என்று அழைக்கப்படும். புதிய நோய் பீதியைக் கிளப்ப ஆரம்பித்துள்ளது.

இந்த வகையானது பிற பொருளெதிரி நோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு கட்டுப்படாத போக்கு அதிகரித்து வருவதால் அந்நோய் விரைவில் குணப்படுத்த முடியாத ஒரு நோயாக மாறி வருவதை இப்போதே கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என பிரிட்டனில் இடம்பெறவுள்ள மருத்துவ மாநாட்டில் எச்சரிக்கப்படவுள்ளது.

உலக அளவில் பார்க்கும் போது ஒவ்வொரு ஆண்டும் புதிதாக பத்துக் கோடி பேருக்கும் அதிகமானோருக்கு இந்த நோய்த் தொற்று ஏற்பட்டு வருவதாக ஐ.நா கூறுகிறது.

இதுநாள் வரைவெட்டைநோயை எதிர்க்கவல்ல புதிய பொருளெதிரி மருந்தை ஆராய்ச்சியாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் என்ற நம்பிக்கையோடு நோயாளிகளுக்கு மற்றைய சிகிச்சைகளைத் தந்து காலம் தாழ்த்துவதைத் தவிர சுகாதாரத்துறை நிர்வாகிகளுக்கு வேறு வழியில்லாமல் போகலாம் என நுண் உயிரியலாளர்களுக்கான இந்த மாநாட்டில் எச்சரிக்கப்படவுள்ளது.



அதேசமயம் பாதுகாப்பான உடலுறவுப் பழக்கங்கள் மேம்பட்ட நோய்க் கண்டுபிடிப்பு பரிசோதனைகள் போன்றவை அவசியம். இம்மாநாட்டில் பாலுறவு நோய்கள் சம்பந்தப்பட்ட பிரிட்டனின் முன்னணி நிபுணரான பேராசிரியை கேத்தி ஐசன் குரலெழுப்பவுள்ளார்.





# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:
24.12.1949



மறைவு:
02.06.2013

## அமரர் முத்துத்தம்பி சச்சிதானந்தம்

**(வெற்றிலைக் கடை ஆனந்தன் - பருத்தித்துறை)**

கடந்த 02.06.2013 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவன் முத்துத் தம்பி சச்சிதானந்தம் அவர்களின் மறைவின்போது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் பல்வேறுவகைகளில் உதவியவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்தோடு (02.07.2013) இன்று காலை 6 மணிக்கு புற்றளைப் பிள்ளையார் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் வீட்டில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நறுவிலியடி,
புலோலி தெற்கு, புலோலி. (சி-3829) குடும்பத்தினர்


# நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதன்படி பொது ஸ்தாபனங்கள், பாடசாலைகள், வணக்க ஸ்தலங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், பராமரிப்பற்ற காணிகள் என்பவற்றில் இது தொடர்பான செயற்பாடுகள் நடைபெறவுள்ளதால் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்புகளை வழங்குமாறு நல்லூர் பிரதேச செயலக செயலாளர் செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். (அ)

# மஹோற்சவம்

பூநகரி முழங்காவில் ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

மஹோற்சவத்தின் எட்டாம் நாளான 11 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை சப்பறமும் இடம் பெறவுள்ளது. தொடர்ந்து தேர்த்திருவிழா சனிக்கிழமையும் தீர்த்தம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். அத்தோடு திருவிழா நாட்களில் தினமும் மாலை சமய சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-9)


# மரண அறிவித்தல்



## திருமதி சசிக்குமார் அனிற்றா சுபோசினி (சோதி)

கொடிகாமம் வீதி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிக்குமார் அனிற்றா சுபோசினி (சோதி) அவர்கள் 01.07.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சசிக்குமார் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிறில் ஜெயராசா ஆனந்தராணி அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் லில்லி புஸ்பம் அவர்களின் மருமகளும் எட்வின் சுரேஸ்குமார் (சுவிஸ்), ஓவியா, தர்மினி, அன்ரன், றமேந்திரன், றென்சியா, விலோஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் யாழினி (சுவிஸ்) நிக்சன் றொபேட், அனிற்றா ஜெயராணி, நிமால் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் 03.07.2013 புதன்கிழமையன்று பி.ப. 3.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கரவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தொடர்புகளுக்கு:**
0774414068, 0777049528 (சி-3830)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று கடந்த

# 14ஆம் அகவையில் 13 ஆண்டுகளில்

அழுத்தமான
காலடிகளை
எடுத்து வைக்கும்
நாம்,
இவ்வேளையில்
வடக்கின்
தனிப்பெரும்
அச்சகதாரர்களாக
எம்மை
வளர்த்தெடுக்க
உதவிய
பணியாளர்கள்,
வாடிக்கையாளர்கள்,
நலன்விரும்பிகள்
அனைவருக்கும்
எம்
நெஞ்சம் நிறைந்த
நன்றிகளைக்
காணிக்கை
ஆக்குகிறோம்.

எமது
அச்சகப் பாசறையில்
அச்சு ஊடக வல்லுநர்களாகப்
பயிற்றுவிக்கப்பட்ட
நம் பணியாளர்களே
இன்று குடாநாட்டின்
அச்சு ஊடகங்கள் தோறும்
பணியாற்றுவதையிட்டுப்
பெருமகிழ்வு கொள்ளும்
நாம்,
தொடர்ந்தும்
அச்சகப் பணியாளர்களின்
தொழில்திறனை
சர்வதேசத் தரத்தில்
விருத்தி செய்து
அச்சுக் கலையை
மேன்மேலும்
வளர்த்தெடுப்போம் என
இந்நன்னாளில்
உறுதி கூறுகிறோம்.

நவீன அச்சுக் கலையின் முன்னோடி

# கரிகணன்

# Harikanan (Pvt.) Ltd.

Printers of the North

#681, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.

Phone : 0094-21-222 2717 / 21-739 7530, Fax : 0094-21-222 2891

www.harikanan.com e-mail: print@harikanan.com

(அ-3832)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் செய்த தவறையே கூட்டமைப்பும் செய்கிறது

## அமைச்சர் ஹெகலிய கூறுகிறார்



(கொழும்பு)

**புலிகளின் தலைவர் பிரபாகரன் வரலாற் றில் எதனை செய்தாரோ அதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் செய்து வரு கின் றார். அவர்கள் ஜனநாயக செயற்பாட்டில் அக்கறை கொள்ளவில்லை என்பதனையும் ஜனநாயகத்துக்கு விரோதமாகவே செயற்படுவார்கள் என்பதையும் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத் தியுள்ளனர் என்று ஊடகத்துறை கெஹலிய ரம்புக்வெல தெரிவித் துள்ளார்.**

பிரபாகரன் கொண்டிருந்த கருத்தியலையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து மேற்கொண்டு செல்கின்றது என்பது தெரிவுக்குழு குறித்த அவர்களின் முடிவின் ஊடாக தெரிய வந்துள்ளது.

மேலும் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்பது திறந்த மேடையாகும். யார் வந்தாலும் வராவிடினும் அதன் செயற்பாடுகளை அர சாங்கம் திட்டமிட்டபடி ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு திருத்தங்கள் மற்றும் 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து ஆராய்வதற் காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித் துள்ளமை தொடர்பிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தின் போதே தெரிவுக் குழுவில் கலந்து கொள்வதில்லை என்ற தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளும் கட்சியினால் முன்மொழியப் பட்டுள்ள உத்தேச பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான ஆளும் கட்சியின் பிரதிநிதிகள் 19 பேர் பெயரிடப்பட்டுள்ளனர். எனினும் ஐக்கிய தேசிய கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இந்தத் தெரிவுக்குழுவில் பங்கு பற்றப் போவதில்லை என அறிவித்து ள்ளன. (அ-2)

# 49 தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டனர்

(கொழும்பு)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவினுள் 49 தொழு நோயா ளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தொழு நோய் வைத்திய நிபுணர் டாக்டர் அலி அக்பர் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் (26ஆம் திகதி) தொழுநோய் பரிசோதனையும் சிகிச்சையும் நடைபெற்றது.

178 பேர் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டு அதில் ஒருவர் மட்டுமே தொழு நோயாளி யென இனம் காணப்பட்டுள்ளார்.

தொழுநோய்கட்டுப்பாட்டுப்பாட்டுப் பிரி வின் சுகாதாரப் பரிசோதகர் ஹல்மதியின் ஏற்பாட்டில் இம்மாதம் நடைபெற்ற தொழு நோய்ப் பரிசோதனை முகாம்களில் சம்மாந் துறையில் 9 பேரும் காரைதீவில் 5 பேரும் சாய்ந்தமருதில் 2 பேரும் கல்முனை தெற் கில் ஒருவரும் பொத்துவிலில் ஒருவரும் தொழுநோயாளர்களென இனம் காணப் பட்டுள்ளனர். (அ-2)

# அரசின் ஊழல் மோசடிகள் மக்களையே பாதிக்கும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளினால் நாட்டு மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள் ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத் தியுள்ளது.

அரசாங்கத்தின் ஊழல்களால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட் டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஒரு குடும்பம் செல்வத்தில் மிதக்கும் அதே வேளை பெருமளவானவர்கள் வறுமையில் வாடி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இலங் கைப் போக்குவரத்து சபையின் ஊழியர்களு க்கு சம்பளம் வழங்கக் கூட அரசாங்கத்திடம் பண மில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சம்பளம் வழங்கப்படாத ஊழியர்கள் போரா ட்டங்களில் ஈடுபட்டபோது பொலிஸாரைக் கொண்டு அவர்கள் அச்சுறுத்தப்பட்டு அவர் களை மீளவும் பணிக்கு அழைத்துச் சென் றதாக தெரிவித்துள்ளார்.

சுவிஸ் வங்கிகளில் இரகசிய கணக்கு களைப் பேணும் இலங்கையர்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியிருப்பதாகவும் இவர் கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வாக்காளராக பதிவு செய்ய 9 ஆம் திகதி வரை காலநீடிப்பு

இடம்பெயர்ந்தோர் வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

போர் நடைபெற்ற காலத்தில் பல்வேறு காரணங்களால் வடக்கு கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசிப் பவர்களில் தம்மை வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ளாதவர்கள் தம்மை பதிவு செய்து கொள்வதற்கான கால அவகாசம் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடக்கு கிழக்கில் இருந்து இடம்பெயர் ந்தவர்கள் 2012 ஆம் ஆண்டுக்கான வாக் காளர் பட்டியலில் பதிவு செய்ய தவறியவர்கள் தம்மை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்க வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த மாதம் 28 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்து கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன் படி எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளதாக தேர்தல் ஆணை யா ளர் தெரிவி த்துள்ளார். அ-2)

# வேலணை பிரதேசத்திற்கு 100 மில். ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ். சிவராசா தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டு கோளுக்கு இணங்க யாழ். மாவட்டத்தில் உள்ள தீவகத்திற்கு விசேட ஒதுக்கீடாக 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.

இந்நிதிஒதுக்கீட்டின்அடிப்படையில்வேலணை பிரதேசத்தின் அபிவிருத்தி பணிகளுக்காக 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் 18 அபிவிருத்திப் பணிகள் வேலணையில் முன்னெடுக்கப்பட வுள்ளன. இந்த அபிவிருத்திப் பணிகள் விரை வில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வேலணை பிரதேசசபைத் தலைவர் மேலும் தெரிவித் தார். (அ-6)



யாழ். முகாமையாளர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இயற்கைப் பசளைகளை பயன்படுத்துவதும் இரசாயன செயற்கைப்பசளை தவிர்த்தலும் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக பேராசிரியர் என். எஸ். ராஜேந்திரன் கருத்துரை வழங்குவதை படத்தில் காணலாம்.

# வெளிநாட்டு வங்கிகளில் கணக்குகளை பேண இலங்கையர்கள் விருப்பம் கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையர்கள் வெளிநாட்டு வங்கிகளில் கணக்குகளைப் பேணுவதற்கு விரும்புவதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளி யிட்டுள்ளது.

வரி ஏய்ப்பில் ஈடுபடுவதற்காகவும் அர சாங்கத்தின் கண்காணிப்பு நடவடிக்கைக ளுக்கு அஞ்சி இவ்வாறு அதிகளவான இலங் கையர்கள் வெளிநாட்டு வங்கிகளில் கணக் குகளைப் பேணி வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிசினஸ் டைம்ஸ் நடத்திய கருத்துக் கணி ப்பின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

உள்நாட்டு நிதிக் கொள்கைகள் மற்றும் கப்பம் கோருவோரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை வைப்பிலிட விரும் புவதாகத் தெரிவித்துள்ளனர்.

எனினும் பெரும்பான்மையானவர்கள் வரி ஏய்ப்பில் ஈடுபடும் நோக்கில் இவ்வாறு பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்ய விரும்புவதாக தெரிவிக்கப்படுகி றது. (அ-2)

# ஓடும் பேருந்தில் பாய்ந்து ஏறியவர் சில்லுக்குள் நசுங்கி உயிரிழப்பு

ஓடிக்கொண்டிருந்த பேருந்தில் முன்கத வின் வழியாக ஏற முயற்சித்த நபர் கீழே விழுந்து அதே பேருந்தின் பின் சில்லில் சிக்கி நசுங்கி மரணமான கோரச் சம்பவமொன்று மஹியங்கனை பிரதேசத்தில் இடம்பெற்றுள் ளது.

அம்பாறையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பேருந்திலேயே மஹியங் கனையில் வைத்து மேற்படி நபர் ஏற முயற் சித்துள்ளார்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது, மஹியங்கனையிலுள்ள தனியார் பேரு ந்து தரிப்பிடத்தில் காத்து நின்றிருந்த மேற்படி நபர் தரிப்பிடத்தில் நிறுத்துவதற்கு முன்பாகவே ஓடிச் சென்று அதில் ஏற முற்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க சிறிவர்தன தெரிவித்தார்.

பேருந்தின் பின் சில்லில் நசுங்குண்டு குற்றுயிருடன் மீட்கப்பட்ட நபர் மஹியங் கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத் தப்பட்டு வருகின்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்



## ஆன்மீகம் 49

**அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி**

...இப்படிப்பட்ட மகான் என்னைத் தன்னுடன் வைத்து அன்பு காட்டுவது அவர் சொல்வதுபோல பூர்வபுண்ணிய பூர்வஜென்ம உறவகத்தான் இருக்கும் என்று முடிவுக்கு வந்தேன்.

ஒருநாள் மாலை இருள் சூழும் நேரம் சாமிகள் ஏகாந்தத்தை நாடி ஆச்சிரமம் அருகிலிருந்த அரசமரத்தடியில் அமர்ந்திருந்தார்கள். அன்று அதிசயமாக ஆச்சிரமத்தில் சாமி, நான் ஆகிய இருவர் மட்டுமே இருந்தோம்.

பொதுவாக மாலை ஆறுமணி முதல் எட்டுவரை சித்தர் சுவாமிகளும் அடியேனும் தனித்தனியாய் தனித்து இருக்கும் பாக்கியம் பல வருடங்களில் இன்று எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மனம் புலங்காகிதமானது... இதுபோன்ற வேளைகளில்தான் என் மனதில் எழும் ஐயப்பாடுகளுக்கு ஐயனிடம் விடை பெறுவேன்.

கண்களை மூடி, மௌனத்தில் இருந்தவர் என்ன ராஜா இப்ப உனக்கு என்ன தெரிஞ்சாகணும்? என்றார் கண்களைத் திறவாமலே! நான் தயங்கியவாறே பழங்கால ஓலைச் சுவடிகளில் சித்தர்கள் பற்றி எழுதியிருப்பதாக கேள்விப்பட்டேன். இதெல்லாம் உண்மைதானா? என்றேன்.

அதற்கு அவர் உண்மைதான் என்றார்.

பனை ஓலை மக்கித் தூளாக போய்விடும். அது எப்படி இவ்வளவு காலம் இருக்க முடிந்தது? என்றேன் நான். நீ சொல்வதும் உண்மைதான். ஆனால், முற்காலத்தில் ஓலைகள் குறுகிய காலகட்டத்தில் அழிந்துவிடாதவாறு அவ்வோலைகள் சித்தர்கள் முறைப்படி பதப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டவை. அதோடு சீடர்கள் அவைகளை எடுத்துப் பாதுகாத்து வந்தார்கள்.

அதோடு பிற்காலங்களில் இந்த ஓலைச்சுவடிகளை மருத்துவர்களும் ஞானவேட்கை உள்ளவர்களும் ஆராய்ந்து வந்தனர். வாழையடி வாழையாக



இந்நிகழ்ச்ச தொர்ந்து இந்த நவீன விஞ்ஞானமயமான உலகில் இவைகள் இன்று அச்சேறி புத்தக வடிவாக பக்தர்களிடம் பொக்கிஷங்களாக போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன.

நூல் நிலையங்களும் இவைகளை பொதுமக்கள் படிக்க வகை செய்து வருகின்றன என்றவர் தம் பக்கத்தில் வைத்து இருந்த ஒரு புத்தகத்தை என்னிடம் கொடுத்து ஓலையிலிருந்து புத்தக வடிவமான இந்நூலில் உன்னைப் பற்றிக்கூட எழுதியிருக்கிறது. கவனமாக படித்தால் புரியும் என்றவாறு கொடுத்தார்.

ஒன்றும் புரியாதவனாக அப்புத்தகத்தை வாங்கிக்கொண்ட நான் அதைப் படிக்க ஆர்வமாக விளக்கு வெளிச்சத்தைத்தேடி ஆச்சிரமத்திற்கு விரைந்தேன். இருவது சித்தர்கள் ஞானக் கோவை என்ற அந்த புத்தகத்தை கவனமாக படிக்கத் துவங்கினேன்.

படித்தேன். முடித்தேன். ஆனால், புரியாமல் விழித்தேன். ராஜகுமாரன் என்ற என் பெயர் இல்லை! பிறகு ஏன் சாமிகள் இப்படிக் கூறினார். ஒருவேளை நம்மைக் கேலி செய்கிறாரா? என்று ஒன்றும் புரியாமல் அப்படியே தூங்கிப்போனேன்.

ஏதோ! ஒரு மலைப்பகுதி இருள் சூழும் நேரம். நான் வழியெங்கும் அடர்ந்திருக்கும் முட்புதர்களை விலக்கியவாறே வருகிறேன். அப்படி ஒரு இடத்தில் புதரை விலக்கும் போது அங்கு மறைந்திருந்த அழகிய ஒரு பீடம் வெளிப்பட்டது. மேலும் புதர்களை முற்றிலும் அகற்றிப் பார்க்கிறேன். அந்த பீடத்தின் மேலே படிக்கட்டுகள் போன்று தோன்றியது.

அந்த படிக்கட்டுகளின் மேலே நிறைய முனிவர்களின் திருவுருவங்கள் தெரிந்தன. ஒவ்வொரு உருவத்தின் மேலும் யாரோ ஒருவர் ஒரு மஞ்சள் ஒளியை பாய்ச்சுவதுபோல தெரிந்தது. அப்படி நகர்ந்த ஒளி ஒரு உருவத்தின் மீது மட்டும் இறுதியில் நிலைத்து நின்றது. அது ஒரு முனிவரின் உருவம் அதன் கீழே புலிப்பாணி என்று எழுதியிருந்தது

தொடரும்

---

# யாழ்ப்பாணக் குடா நாட்டில் நன்னீரின் அளவு குறைந்து வருகிறது!

## தடுப்பது எப்படி...?

...இதேபோன்று ஆணையிறவின் கிழக்கு முனையிலுள்ள சுண்டிக் குளத்தில் அணை ஒன்று கட்டப்பட்டு நன்னீர் கடலுக்குள் வெளியேறுவது தடுக்கப்பட்டு. இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டு ஆனையிறவு கடல்நீரேரியில் சில ஆண்டுகள் நன்னீர் தேக்கி வைக்கப்பட்டது. ஆனால், கெட்டவாய்ப்பாக இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்குகள் காரணமாக ஆணைக்கட்டு உடைக்கப்பட்டு நன்னீர் கடலுடன் கலக்க நேரிட்டது.

ஆனையிறவு கடல்நீரேரியிலிருந்து நன்னீர் நீரை தென்முனையிலுள்ள வடமராட்சி கடல்நீரேரிக்குக்கொண்டு செல்வதற்காக ஆனையிறவின் வடமுனையிலிருந்து முள்ளியான்



தொடர் கால்வாய் என்கின்ற திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இது 12 மீற்றர் அகலமும் 4 கி.மீற்றர் நீளமும் உடையதாகும். இந்தக் கால்வாய் அமைக்கும் திட்டத்தின் 80 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் இதற்கான நிதி கிடைக்காததால் இத்திட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது.

தொண்டமனாறு ஆற்றின் நீர்க் கொள்ளளவை அதிகரித்து, அதன் ஊடாக வடமராட்சி கடல்நீரேரி நன்னீரைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு சில ஆண்டுகளின் பின்னர் மரத்தால் செய்யப்பட்ட அணைக்கட்டு உடைந்ததால் நன்னீர் கடலுடன் கலக்க வேண்டியேற்பட்டது.

அரியாலைக் கடலுடன் கலக்கும் உப்பாறு கடல்நீரேரியில் வான்கதவுகளை உருவாக்குவதற்கான திட்டம் வரையப்பட்டது. இதன்மூலம் உப்பாறு கடல்நீரேரியில் நன்னீர் நீரேரி ஒன்றை உருவாக்க முடியும் எனக் கருதப்பட்டது. இந்நிலையில் வான் கதவுகள் உருவாக்கப்பட்ட போதிலும் இவற்றின் பலகைகள் அழிவடைந்ததால் உப்பாறு கடல் நீரேரியில் தேக்கி வைக்கப்பட்ட நன்னீர் மீண்டும் கடலுக்குள் கலந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாணத் திட்டத்தை மேற்கொள்வதற்கு 1960களில் மேற்கூறப்பட்ட திட்டங்கள் பகுதியளவில் அமுல்படுத்தப்பட்டவை அறிய முடிகிறது. ஆனால், இத்திட்டத்தின் முக்கிய பகுதியான ஆனையிறவுக் கடல்நீரேரியிலிருந்து வடமராட்சி நீரேரிக்கு நன்னீரை வழங்கக்கூடிய முள்ளியான் தொடர் கால்வாய்த் திட்டம் முழுமையாகப் பூர்த்தியாக்கப் படவில்லை. குறுகிய ஆண்டுகள் மட்டும் வடமராட்சி மற்றும் உப்பாறு நீரேரிகள் நன்னீரைத் தேக்கிவைத்திருந்தன. இதன்மூலம் யாழ்க்குடா நாடு பல்வேறு நலன்களைப் பெற்றுக் கொண்டது. இதன்மூலம் பல உவர் நீர்க் கிணறுகளிலிருந்து நன்னீரைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

யாழ்ப்பாணத்திட்டத்தைப் பூர்த்தியாக்குவதன் மூலம், 13,000 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் யாழ்ப்பாண விவசாயிகள் நெல் பயிரிட்டிருக்க முடியும். தற்போது இந்தப் பகுதியில் காணப்படும் உவர்மண் மற்றும் ஏனைய காரணங்களால் 8000 ஹெக்ரேயரில் மட்டும் நெல் பயிரிடப்படுகிறது. வன்னிப்பெருநிலப்பரப்பில் நீர்ப்பாசனக் கால்வாய்கள் ஊடாக நீரைப் பெற்று அறுவடை செய்வதைப் போலல்லாது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் நெற்பயிர்ச்செய்கையானது முற்றிலும் மழைநீரை நம்பியே மேற்கொள்ளப் படுகிறது.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் ஒரு ஏக்கர் பெறும் மழைநீரின் மூன்றின் ஒரு பகுதியை மட்டுமே யாழ்ப்பாணத்தில் ஒரு ஏக்கர் நிலம் பெறும் மழை நீராகும். வடமராட்சி மற்றும் உப்பாறு கடல்நீரேரிகள் நன்னீர் தேக்கி வைக்கும் நீரேரிகளாக மாற்றப்பட்டால் கிணறுகளின் நீர்மட்டம் அதிகரிக்கும். இதன் மூலம் மழைநீர் [illegible] தங்கியிராது யாழ்ப்பாண விவசாயிகள் நிலக்கீழ் நீரைப் பயன்படுத்தி நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியும்.

வடமராட்சி மற்றும் உப்பாறு கடல்நீரேரிகளை அண்டியுள்ள 4400 ஹெக்ரேயர் நிலப்பரப்பானது உவர்த் தன்மையாகக் காணப்படுவதால் தற்போது இங்கு பயிர் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. இவ்வாறு நன்னீரைத் தேக்கி வைப்பதன் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் 30 சதவீதமான நீர்மட்டம் அதிகரிக்கும். இந்த நீரானது வீட்டுத் தேவைகளுக்காகவும் விவசாயத் தேவைகளுக்காகவும் பயன்படுத்துவதற்கான சாதகம் காணப்படும்.

சுண்டிக்குளம் படகுத்துறை மற்றும் முள்ளியான்தொடர் கால்வாய் என்பனவற்றின் பணிகள் பூர்த்தியாக்கப்படுவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் இன்னமும் எவ்வித அறிவிப்புக்களையும் மேற்கொள்ளவில்லை. யாழ்ப்பாண- கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்திற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரணைமடுக்குளத்திலிருந்து நீரைப் பெற்று யாழ்ப்பாணத்திற்கு வழங்குவதே இத்திட்டமாகும். இரணைமடுவிலிருந்து நீரைப்பெற்று யாழ்ப்பாணத்திற்கு வழங்குவதால் இரணைமடுநீரை நம்பியிருக்கும் விவசாயிகள் பாதிப்படைவர். இதனால் 10 மில்லியன் டொலர்கள் செலவில் இரணைமடு அணைக்கட்டை இரண்டு அடி உயரம்வரை உயர்த்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், 2009 மற்றும் 2012 போன்று தாழ்வான மழைவீழ்ச்சி பெறப்படும் போது இரணைமடுக் குளத்தின் கொள்ளளவானது வழமையைவிடக் குறைவாகக் காணப்படும்.

இரணைமடுக்குளத்தின் அணைக் கட்டை இரண்டு அடியால் உயர்த்தி யாழ்ப்பாணத்திற்கு நீரைவழங்குவதற்கு 10 மில்லியன் டொலர்களை செலவிடுவதைவிட முன்னர் குறிப்பிட்ட யாழ்ப்பாணத் திட்டத்தை முழுமையாகப் பூர்த்திசெய்வது நலன் பயக்கும்.

சண்டே லீடர்-
திரு.ஆறுமுகம்

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகான் சீலவாணர்



பிரம்மதத்தர் காசியின் மன்னராக இருந்தபோது அவருக்குப் புதல்வராக போதிசத்வர் அவதரித்தார். அவருக்கு சீலவாணர் என்ற பெயரிடப்பட்டது.

சிறுவயது முதல் ராஜ விடயங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் நன்கு பயின்று தேர்ச்சி அடைந்திருந்த சீலவாணர் பிரம்மதத்தருக்குப்பின் காசியின் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். தனது குடிமக்களை உயிரினும் மேலாக நேசித்து அவர்களுடைய நல்வாழ்வே தனது லட்சியமாகக் கொண்டு ஆட்சி புரிந்தார். குற்றவாளிகளைக் கூட கருணையுடன் நடத்தினார். அவர்களுக்குத் தண்டனை அளித்து மேலும் துன்புறுத்தாமல் அவர்கள் மனம் திருந்தி நல்வாழ்வு வாழ வகை செய்தார். தவறு செய்பவர்களுக்கு அறிவுரை கூறி அவர்கள் மீண்டும் தவறு செய்யாதவாறு நல்வழிப்படுத்தினார். இத்தகைய செயல்களினால் காசியில் குற்றம்புரிபவர்களின் எண்ணிக்கை குறைந்தது.

ஆனால், சீலவாணரின் இரக்க சுபாவத்தைக் கண்ட கோசல நாட்டு மந்திரி அது அவருடைய பலவீனத்தைக் காட்டுவதாகப் பொருள் கொண்டான். காசி ராஜ்ஜியத்தின் மீது படை எடுத்தால் எளிதில் வென்றுவிடலாம் என்று மனப்பால் குடித்த மந்திரி தன் மன்னரிடம் காசியின் மீது படை எடுத்துக் கைப்பற்றுமாறு கூறி வந்தான்.

ஆனால், கோசல ராஜாவிற்கு மந்திரியின் வார்த்தைகளில் முழு நம்பிக்கை உண்டாகவில்லை. உண்மையை அறிவதற்காக தன்னுடைய சில வீரர்களை கிராமங்களில் கொள்ளை அடிக்க காசிக்கு அனுப்பி வைத்தான். அதன்படியே கோசல நாட்டு வீரர்கள் காசியின் கிராமங்களைக் கொள்ளை அடிக்க முயன்றபோது கிராமத்து மக்கள் அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து சீலவாணரின் முன்னே நிறுத்தினர்.

ஆனால், அவரோ அவர்களுக்கு அறிவுரைக் கூறி பணம் கொடுத்து அனுப்பினார். தகவல் அறிந்த கோசல

**அம்புலிமாமா கதைகள்**


ராஜா வியப்புற்றார். சீலவாணர் தைரியமற்றவர என்று அவரும் தப்புக் கணக்குப் போட்டார்.

இன்னொரு முறை சீலவாணரின் தைரியத்தை சோதிக்கலாம் என்று எண்ணி மீண்டும் தனது வீரர்களை காசிக்கு கொள்ளை அடிக்க அனுப்பி வைத்தார். அவர்கள் பொது மக்களிடம் பிடிபட இந்தமுறையும சீலவாணர் அவர்களை மன்னித்துப் பொருளுதவி செய்து அனுப்பினார். இதன்பிறகு சீலவாணர் ஒரு கோழை என்று கோசல ராஜா முடிவாகத் தீர்மானம் செய்தார். காசியைக் கைப்பற்றத் திட்டமிட்டு ஒருபெரும் படையுடன் முற்றுகையிட்டான்.

எதிரிகள் புகாமல்கோட்டை வாயிலை



மூடிய பிறகு காசிநாட்டு வீரர்கள் விரைந்து சென்று சீலவாணரிடம் அரசே கோசல மன்னர் நம்மீது படையெடுத்துள்ளார். நமது கோட்டையை முற்றுகையிட்டு இருக்கிறார். தாங்கள்



அனுமதி அளித்தால் அவர்களுள் நேருக்கு நேர் மோதி சின்னா பின்னமாக்குவோம் என்றனர்.

சீலவாணர் போரிட விரும்பவில்லை. தன் படைவீரர்களிடம் அமைதியாக அவர்களுக்கு இந்த நாடு வேண்டுமெனில் அவர்களே எடுத்துக்கொள்ளட்டும். கோட்டை வாயிலைத் திறந்து விடுங்கள் என்றார்.

உடனே ஒரு தூதுவன் மூலம் காசி உங்களை வரவேற்கிறது. பகைவனாக இல்லை. நண்பனாக வாருங்கள் என்று செய்தி அனுப்பினார். போரிட பயந்து கோழையாக சீலவாணர் சரணாகதி அடைந்துவிட்டார் என்று எண்ணிய கோசல ராஜா தன் படையுடன் அட்டகாசமாக காசி நகரில் நுழைந்தான். நேராக சீலவாணரின் சபையை அடைந்தான். சீலவாணரையும் மற்ற படைத் தலைவர்கள் மந்திரிகளைக் கைது செய்ய உத்தரவிட்டு அவர்களுடைய ராஜாங்க உடைகள் மணி முடி ஆகியவற்றைக் கைப்பற்றச் செய்தான்.

உங்களை நண்பர்களாகவே கருதுகிறோம். ஆகவே நீங்கள் எங்களை இவ்வாறு நடத்துவது சரியல்ல. நாங்கள் நாட்டைவிட்டுச் செல்கிறோம் என்ற சொல்லிவிட்டு சீலவாணர் மந்திரிபிரதானிகள் புடைசூழ நாட்டை விட்டு வெளியேறினார்.

காசியை விட்டு வெளியேறிய சீலவாணர் தன் மந்திரிகள் சூழ காட்டினை அடைந்தார். அன்றிரவு எதுவும் உண்ணாமல களைப்புடன் அவர்கள் அனைவரும் காட்டிலேயே படுத்து உறங்கினர். திடீரென நடு இரவில் மனிதர்களின கூக்குரல்களும் காலடிச் சத்தமும் கேட்டு சீலவாணரும் உடனிருந்தவர்களும் விழித்துக்கொண்டனர். விழித்தவர்கள் கண்களில் ஒரு கொள்ளைக்கூட்டம் தென்பட்டது.

கொள்ளையர் தலைவன் பணிவுடன சீலவாணரை அணுகி மகாராஜா நாங்கள் ஒரு காலத்தில் கொள்ளைக் காரர்களாக இருந்தோம். தங்களது ஒப்பற்ற கருணையினாலும் தாங்கள் எங்கள் மீது காட்டிய அன்பினாலும் மனம் திருந்தி திருட்டுத் தொழிலையே விட்டுவிட்டு அமைதியாக வாழ்க்கை நடத்தினோம்.

ஆனால், கயவனான கோசல மன்னன் அநியாயமாகத் தங்களை விரட்டிவிட்டது குறித்து எங்கள் உள்ளம் கொதிக்கிறது. நாங்கள் மீண்டும் கொள்ளையடிக்க ஆரம்பித்து விட்டோம். இன்று அரண்மனையைக் கொள்ளையடித்து தங்களுடைய உடை, ஆபரணங்கள், மணிமுடி ஆகியவற்றைக் கவர்ந்து வந்துள்ளோம். கஜானாவில் இருந்து பணமும் கொள்ளையடித்தோம். நீங்கள் இவ

ற்றை அணிந்து கொள்ளுங்கள். உங்களுக்காக நாங்கள் கொண்டு வந்துள்ள உணவை உண்ணுங்கள் என்று கூறினான்.



நீங்கள் செய்தது தவறு. கோசல மன்ன் இன்றுதான் நமது நாட்டில் பதவி ஏற்றுள்ளார். அவரிடம் உங்கள் துன்பங்களை எடுத்துரைத்தால் அவர் உங்களுக்கு உதவி செய்வார். அவருக்கு அந்த வாய்ப்பைத் தராமல் நீங்கள் பழைய தொழிலுக்குத் திரும்பியது சரியல்ல! அவரிடம் உங்கள் நிலைமையை எடுத்துக்கூறி உங்கள் நல்வாழ்விற்கு உதவி கேளுங்கள் என்றார் சீலவாணர்.

அவன் ஒரு கயவன் உங்களை நயவஞ்சகமாக நாட்டை விட்டுத் துரத்திய அவன் மீது நாங்கள் எப்படி நம்பிக்கை வைப்போம்? அவனை அரசனாக நாங்கள் மதிக்கவில்லை. நீங்கள்தான் எங்கள் மதிப்பிற்குரிய மன்னர் என்றனர் கொள்ளையர்கள்.

ஆனால், சீலவாணரோ அந்தப் பணத்தை என்னிடம் கொடுங்கள். நான் நாளைக்கே அவரிடம் சென்று திருப்பிக்கொடுத்துவிடுகிறேன். உங்களுக்கு ஒரு நல்வாழ்வு அமைத்துத் தர அவரை நானே வேண்டுகிறேன். நீங்களும் என்னுடன் வாருங்கள் என்றார்.

மறுநாள் சீலவாணர் தனது மந்திரிகளும் கொள்ளைக்காரர்களும் புடைசூழ சபையை அடைந்தார். சீலவாணரைக் கண்டதும் கோசல மன்னன் வியப்படைந்தான். கஜானாப் பணத்தைத் திருப்பிக்கொடுத்த சீலவாணர் முதல் நாளிரவு நடந்த விடயங்களை விளக்கிவிட்டு கோசல மன்னரே நீங்கள் என்னைவிட நேர்மையாகவும் நியாயமாகவும் அன்புடனும் கருணையுடனும் ஆட்சி நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் என்னுடைய நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைத்தேன்.

ஆனால், பாவம் இந்தக் கொள்ளைக்காரர்கள் தங்களுடைய நல்ல இதயத்தை அறியாமல் அவசரப்பட்டு அரண்மனையில் கொள்ளையடித்து விட்டனர். அதைத் திருப்பிக் கொடுப்பதுடன் இவர்களுக்கு உதவி செய்து நல்வாழ்க்கை வாழ அனுமதியுங்கள். இதுவே என் பிரார்த்தனை என்றார்.

அந்த வார்த்தைகளைக்கேட்டதும் கோசல மன்னனின் இதயம் அனலிலிட்ட மெழுகாய் உருகியது. தனது சிம்மாசனத்திலிருந்து இறங்கிவந்து சீலவாணரின் கால்களில் விழுந்து வணங்கினான். சீலவாணரே கொள்ளைக்கார்கள்கூட உங்களை நேசிக்கிறார்கள் என்றால் நீங்கள் எவ்வளவு உத்தமமானவர்!

உங்களிடம் நான் தகாத முறையில் நடந்துகொண்டதற்காக என்னை மன்னித்து விடுங்கள். உங்களது ராஜ்ஜியத்தை நீங்களே பெற்றுக் கொண்டு ஆட்சி செய்யுங்கள். எனக்கு உங்களுடைய ராஜ்ஜியம் வேண்டாம். உங்களுடைய நட்பு ஒன்றே போதும் என்று கண்ணீர் மல்கக் கூறினான். கோசல மன்னன்.

மீண்டும் சீலவாணர் காசிக்கு ராஜாவானார். கோசல மன்னனை சகல மரியாதைகளுடன் அவன் நாட்டிற்கு வழி அனுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலாக்கம் என்ற வாக்கை மீறி அரசாங்கம் செயற்படுகின்றது

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை மீறி செயற்பட்டு வருவதாலேயே நாடாளுமன்றத் தேர்வுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபெறாது என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். அவர் பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசியல் சாசனத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வரும் நோக்கில் அரசு நாடாளுமன்ற தேர்வுக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

அதில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவை பங்குபெறுவது இல்லை என்று தீர்மானித்துள்ள நிலையில் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதில் சேருவதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

அரசுக்கும் தமக்கும் முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இருதரப்புக்கும் இடையே ஒரு உடன்பாடு எட்டப்பட்டு அதன் பின்னர் அந்த அம்சங்களைத் தேர்வுக் குழுவுக்கு எடுத்துச் செல்வது என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் ஆனால் அரசு அதை மீறிச் செயற்படுவது தங்களுக்கு ஏற்புடையதல்ல.

வடமாகாண சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ள சூழலில் 13 ஆவது சட்டத் திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் முற்றாக அழிக்க அல்லது வலுவை குறைக்க அரசு தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் அரசு ஒரு முன்னெடுப்பைச் செய்யும் நிலையில் அப்படியான ஒரு செயற்பாட்டில் பங்கு கொள்ள முடியாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகிறது எனவும் அவர் கூறுகிறார்.

இந்திய அரசு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகத்துக்கு 13 ஆவது சட்ட திருத்தத்தில் அளிக்கப்பட்டுள்ள அம்சங்களை முற்றாக நிறைவேற்றி அதற்கு மேலாகவும் அதிகாரப் பரவலைச் செய்வோம் என்று அரசு கொடுத்த உறுதி மொழியையும் மீறி இப்போது அதற்கு எதிரான விதத்தில் இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது.

அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவையும் அப்படியான நடவடிக்கைக்கு ஒரு களமாக பயன்படுத்த அரசு எண்ணியுள்ள நிலையில் தங்களால் அந்தக் குழுவில் அங்கம் வகிக்க முடியாதுள்ளது எனவும் அவர் வலியுறுத்துகிறார்.

அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஆதரவான கருத்துக்களை அரசுக்குள்ளேயே கொண்டுள்ள அமைச்சர்கள் திஸ்ஸ விதாரண, ரவூப் ஹக்கீம் மற்றும் ராஜித சேனாரட்ன ஆகியோர் இந்தக் குழுவில் உள்வாங்கப்படவில்லை.

அந்தக் குழுவிலும் பெரும்பான்மையினரின் ஆதிக்கமே கூடுதலாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

## வடக்கிலும் தாவரவியல் பூங்காவை அமைக்க அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

வடக்கில் எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் தாவரவியல் பூங்காவை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக பொழுதுபோக்கு அமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி அமைச்சர் ஜயரத்ன ஹேரத் பேராதனை தாவரவியல் பூங்காவைப் பார்வையிடச் சென்ற போது அங்கு இடம்பெற்ற நிகழ்வின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறை பெரும் பங்காற்றுகிறது. இந்நிலையில் முப்பது வருடகால யுத்தம் நிறைவு பெற்றுள்ள வடமாகாணத்தில் தாவரவியல் பூங்காவை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தாவரவியல் பூங்காக்களை மேலும் அதிகரிப்பதற்கு உத்தேசித்துள்ளோம்.

இதன் பிரகாரம் ஹங்செல்லை, அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவிலை ஆகிய பகுதிகளிலும் தாவரவியல் பூங்காக்கள் அமைக்கப்படும்.

இந்தப் பூங்காக்களுக்குத் தேவையான மிருகங்களை ஜப்பான், கொரியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் குறித்து விசாரணை

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் குறித்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதிலும் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சு புகையிரதத் திணைக்களத்திடம் கோரியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையினால் ஏற்பட்ட விபத்துக்களில் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாடு முழுவதிலும் 750 பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் காணப்படுகின்றன. (அ-2)




- ❖1578 - மார்ட்டின் புரோபிஷர் கனடாவின் பபின் தீவைக் கண்டார்.
- ❖1698 - தோமஸ் சேவரி முதலாவது நீராவிப் பொறிக்கான காப்புரிமம் பெற்றார்.
- ❖1823 - பிரேசிலில் போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.
- ❖1853 - ரஷ்யா துருக்கியின் மீது படையெடுத்தது. கிரிமியப் போர் ஆரம்பமானது.
- ❖1876 - மொண்டெனேகிரோ துருக்கி மீது போரை அறிவித்தது.
- ❖1881 - அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்ட் சுடப்பட்டுப் படுகாயமடைந்தார். இவர் செப்டெம்பர் 19இல் மரணமானார்.
- ❖1917 - ஐக்கிய அமெரிக்கா, இலினொய் மாநிலத்தில் கறுப்பினத்தவர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையில் இடம் பெற்ற கலவரத்தில் 48 பேர் உயிரிழுந்தனர்.
- ❖1940 - சுபாஸ் சந்திர போஸ் கொல்கத்தாவில் கைது செய்யப்பட்டார்.
- ❖1941 - உக்ரைனில் லூட்ஸ் நகரத்தில் 2ஆயிரம் யூதர்கள் நாசி ஜேர்மனியர்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- ❖1962-முதலாவது வோல் மார்ட் அங்காடி ஆர்கன்சா மாநிலத்தில் திறக்கப்பட்டது.
- ❖1966-பிரெஞ்சு இராணுவத்தினர் பசுபிக் பெருங்கடலில் அணுவாயுதச் சோதனையை நிகழ்த்தினர்.
- ❖1976 -1954 முதல் பிரிந்திருந்த வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம்கள் மீண்டும் இணைந்து கொண்டன.
- ❖1990 - மெக்காவில் ஹஜ் யாத்திரையின் போது இடம்பெற்ற நெரிசலில் ஆயிரத்து 426 பேர் உயிரிழந்தனர்.
- ❖2002-பலூனில் தனியே இடைவேளை விடாது பறந்த முதல் மனிதர் என்ற பெருமையை ஸ்டீவ் பொசெட் பெற்றார்.
- ❖**2004 - ஆசியான் அமைப்பில் பாகிஸ்தான் இணைந்தது.**

**பிறப்புகள்**

- ❖1923 - விஸ்லாவா சிம்போர்ஸ்கா, நோபல் பரிசு பெற்ற போலந்து எழுத்தாளர்.
- ❖1925-பத்திரிசு லுமும்பா, கொங்கோவின் பிரதமர் (இ. 1961)
- ❖1877 - ஹேர்மன் ஹெசே, இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற கவிஞர் (இ. 1962)

**இறப்புகள்**

- ❖1566 - நோஸ்ராடாமஸ், பிரெஞ்சு சோதிடர் (பி. 1503)
- ❖1582 - அக்கெச்சி மிட்சுஹீடெ ஜப்பானிய சாமுராய் (பி. 1528)
- ❖1961 - ஏர்னெஸ்ட் ஹெமிங்வே, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (பி. 1899

**தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு**

தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (Association of Southeast Asian Nations) அல்லது ஆசியான் (ASEAN) என்பது தென்கிழக்காசியாவின் 10 நாடுகளின் பொருளாதார மற்றும் புவியியல் சார்ந்த அரசியல் கூட்டமைப்பு ஆகும். இவ் அமைப்பை 1967ஆம் ஆண் டு ஒக்ஸ்ட் மாதம் 8ஆம் திகதி அன்று இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து அமைத்தன. பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தல், உறுப்பு நாடுகளிடையே சமூக மற்றும் பண்பாட்டு உறவுகளைப் பேணல், பிராந்தியத்தில் அமைதி பேணல் என்பன இவ்வமைப்பின் முக்கிய குறிக்கோள்களில் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்பது ஆபத்தானது

**தகல்வ் ஊடகத்திற்கு கைட யோன் றாக்மான் எழுதியுள்ள பத்தியிலிருந்து... மொழிபெயர்ப்பு புதினப்பலகை ஊடகம்**

இலங்கை அரசாங்கம் செய்த குற்றங்களைக் கணக்கெடுக்காதது மட்டுமல்ல, இதற்கு கைம்மாறு செய்கின்ற நிலையும் காணப்படுகிறது. அதாவது, இவ்வாண்டு நவம்பரில், இலங்கையானது, பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சி மாநாட்டுக்கு தலைமை தாங்கவுள்ளது.

மியன்மாரில் ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்புவதில் தற்போது அனைத்துலகமும் மிக மும்முரமாக ஈடுபட்டுள்ள அதேவேளையில், பிறிதொரு ஆசிய நாடான இலங்கையின் ஜனநாயகம் அழிந்து போவது, உலகநாடுகளின் கண்களுக்குத் தெரியவில்லை என்பது ஆபத்தானது.

இந்த அடிப்படையில், சிறிலங்கா அரசாங்கம் செய்த குற்றங்ளைக் கணக்கெடுக்காதது மட்டுமல்ல, இதற்கு கைம்மாறு செய்கின்ற நிலையும் காணப்படுகிறது. அதாவது இவ்வாண்டு நவம்பரில், இலங்கையானது பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள், ஒன்றுகூடும் உச்சிமாநாட்டுக்கு தலைமை தாங்கவுள்ளது.

இதுவரை, இலங்கையில் இந்த மாநாட்டை நடத்துவதை, பொதுநலவாய அமைப்பின் 54 உறுப்பு நாடுகளில் கனடா மட்டுமே, தான், புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்திருந்தது. அதாவது, பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு இலங்கையில் நடாத்தப்பட்டால், தான், அதில் பங்குகொள்ளப் போவதில்லை என கனேடிய பிரதமர் அறிவித்திருந்தார்.


ஆனால், பிரித்தானியா, அவுஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் பல்வேறு ஜனநாயக நாடுகள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள இலங்கையில், நடத்தப்படவுள்ள இந்த உச்சி மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும். 2009 இல் இலங்கைப் படைகள், நாட்டில் தொரடப்பட்ட உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டுவந்து வெற்றிவாகை சூடியிருந்தனர். ஆனால், இந்தப் படைகள் பல்வேறு மீறல்களைப் புரிந்திருந்தனர். இலங்கையின் தமிழ் மக்கள் வாழும் வடக்கில் தொடரப்பட்ட இறுதிக்கட்டப் போரில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கொல்லப் பட்டதாக ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின் இறுதிக் கட்டத்தில் காட்டுமிராண்டித் தனமான பல்வேறு அழிவுகள் மேற்கொள்ளப்பட்டு பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டபோதிலும், உள் நாட்டில் 29 ஆண்டுகளாகத் தொடரப்பட்ட பயங் கரவாத யுத்தத்தை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமானது தனது ஆட்சிக்காலத்தில் முடிவுக்குக் கொண்டுவந்ததாக புகழாரம் சூட்டப்படுகிறது. இவ்வாறான ஒரு கொடுமையான வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட யுத்தகால மீறல்கள் கவனத்திற் கொள்ளப்படாவிட்டாலும், இந்தக் குற்றங்கள் மிகப் பயங்கரமானதாகும்.

இலங்கை அரசாங்கத்தின் மீது காணமற்போதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளன. இதேபோன்று ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப் படுவதுடன், சிலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாண்டு, இலங்கையின் பிரதம நீதிபதி மீது குற்றப் பிரேரணை முன்வைக்கப்பட்டு, அவர், பல வந்தமாகப் பதவியிலிருந்து நீக்கப் பட்டார்.

இதேவேளையில், மஹிந்த ராஜ பக்ஷ குடும்பமானது, வர்த்தகம் மற்றும் அரசாங்கம் மூலம் தனது செல்வாக்கை அதிகரித்துவருகிறது.

இலங்கை ஜனாதிபதி, தன்னைத் தானே புகழ்ந்து பாடுவதுடன் தனது பெயரைப் பொறிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். இவ்வாண்டு இறுதியில் இலங்கை வரும் பொதுநலவாய் அமைப்பைச் சேர்ந்த அரசாங்கத் தலைவர்கள், இலங்கையில் புதிதாகக் கட்டப்பட்ட ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையத்தில் தரையிறங்குவதிலும், தொடர்ந்து அண்மையில் திறக்கப்பட்ட ராஜபக்ஷ தேசிய திரையரங்கில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் கலந்து கொள்வதிலும் மகிழ்ச்சி கொள்ள முடியும்.



இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள இவ்வாறான குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் சூடான விவாதங்களை நடத்திவருகின்றன. இலங்கை அரசாங்கமானது நீதித்துறை மற்றும் அரசியல் விமர்சகர்கள் மீது மேற்கொள்ளும் அடாவடிகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இலங்கையில் சர்வாதிகாரம் தலைதூக்கியுள்ளது என அனைத்துலக நெருக்கடிகள் குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமானது, கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தில் தலையிடுவதுடன், தன்னை விமர்சிப்பவர்களைத் தொடந்தும் அச்சுறுத்தி வருகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. அரசாங்க அதிகாரிகள் அச்சுறுத்துகின்றனர். இனந்தெரியாதோர் ஊடகப்பணியாளர்கள் மீதும், பொது அமைப்புக்கள், அரசியல் எதிர்க் கட்சிகள் மீதும் தாக்குதல் நடத்துகின்றனர் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஊடக சுதந்திரம் தொடர்பான சுட்டி ஒன்றில் இலங்கையானது 179 நாடுகளில் 162 வது இடத்தில் உள்ளதாக எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாண்டு இலங்கையில் புலனாய்வுத் தகவல்களை வெளியிடும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் மேற்கொள்ளப்படும் படுகொலைகள் மற்றும் கடத்தல் சம்பவங்கள் தொடர்பான தனது ஆழ்ந்த அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில், நீதித்துறை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, *இலங்கையில் பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு நடத்தப்பட்டால், அது இந்த அமைப்பின் பெறுமதி, நம்பகத் தன்மை மற்றும் எதிர்காலம் தொடர்பில் மிகப்பெரிய கேள்வியை எழுப்பும்* என பொதுநலவாய அமைப்பின் சட்டவாளர் சங்கம் அறிவித்திருந்தது.

இலங்கையானது, பொதுநலவாய அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளான ஜனநாயகம் சுதந்திரம், சமாதானம், சட்ட ஆட்சி போன்றவற்றை மீறி, நடப்பதாக குற்றப் பட்டுள்ள நிலையில், இங்கு பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை நடாத்துவது நிறுத்தப்படக்கூடாது என அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இந்த அமைப்பின் செயலாளர் நாயகமான கமலேஸ் சர்மா, இலங்கை விடயத்தில் எந்தவொரு தலைமைத்துவப் பண்பையும் பேணத் தவறிவிட்டார் எனக் கூறப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும், கமலேஸ் சர்மா ஒரு சிவில் அதிகாரி ஆவார். இந்நிலையில் இலங்கை தொடர்பில் பொதுநலவாய அமைப்பு ஒன்று சேர்ந்து முடிவெடுக்க வேண்டும். கனடா தவிர, வேறெந்த நாடும் இதனைச் செய்யவில்லை.

பிரித்தானியப் பேரரசிலிருந்து உருவாக்கப்பட்ட பொதுநலவாய அமைப்பானது ஒரு பெறுமதி மிக்க வலைப்பின்னல் என நோக்கப் படுகிறது. பிரித்தானிய இராஜ தந்திரிகள் வெளியுறவு மற்றும் பொதுநலவாய அமைப்பு செயலகம் போன்றவற்றில் பணியாற்றுகின்ற போதிலும், இலங்கை விடயத்தில் அமைப்பின் ஏனைய உறுப்பு நாடுகளின் துணையின்றி நடவடிக்கை எடுப்பதில் தயக்கம் காண்பிக்கின்றனர்.

ஆசியாவுடன் உறைவைக் கட்டியெழுப்பும் அவுஸ்திரேலியாவானது, இலங்கை விடயத்தைக் கவனத்திற் கொள்வது போல் தெரியவில்லை. இந்நிலையில், இதில் அங்கம் வகிக்கும் தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா ஆகியன தாம் ஜனநாயக நாடுகள் எனக் கூறிவதில் பெருமை கொள்கின்றன.

குறிப்பாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான தமிழ் மக்களைக் கொண்டுள்ள இந்தியாவானது, இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாடு நடாத்தப்படுவதைப் புறக் கணிக்க வேண்டும். ஆனால், இந்திய அரசாங்கம் இன்னமும் இதனைச் செய்ய முன்வரவில்லை.

இவ்வாண்டு இறுதியில் பொது நலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்கள் உச்சிமாநாட்டில் பங்கு கொள்வதற்கு இலங்கை வரவுள்ளனர் என்பது கவலைதரும் உண்மையாகும். இதனுடன் மட்டும் பொது நலவாய அமைப்பின் அழிவுகாலம் முடிவுவந்துவிடப்போவதில்லை.

இதன்பின்னரும், இலங்கை அடுத்த இரு ஆண்டுகள் வரை பொதுநலவாய அமைப்பின் தலைமைத் துவத்தை ஏற்றுக்கொள்ளும். இது நடந்தால், அதன் பின்னர், உலக விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை பொதுநலவாய அமைப்புக் கொண்டுள்ளது என்கின்ற கருத்து முடிவுக்கு கொண்டுவரப்பட்டுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் புதிய நுழைவு அனுமதி விதிக்கு அரசு எதிர்ப்பு

(கொழும்பு)

**ஆபத்துடைய நாடுகள் எனக் கருதப்படும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த ஆறு நாடுகளில் இருந்து பிரித்தானியாவுக்கு பயணம் செய்வோர் நுழைவு அனுமதி பெற பிணையாக 3 ஆயிரம் பவுண்ஸ் செலுத்த வேண்டும் என்ற பிரித்தானியாவின் புதிய விதிக்கு இலங்கை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்த எதிர்ப்பு குறித்து இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன் றன்கின்னிடம் இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரியப் படுத்தியுள்ளார்.**

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, ஜைஜீரியா மற்றும் கானா ஆகிய ஆறு நாடுகளில் இருந்து பிரித்தானியாவுக்கு பயணம் செய்வதற்கான நுழைவு அனுமதியைப் பெற விண்ணப்பிக்கும் போது பிணையாக 3 ஆயிரம் பவுண்ஸ் செலுத்த வேண்டும் என பிரித்தானியா அறிவித்திருந்தது.

அத்துடன் தமது நுழைவு அனுமதிக் காலம் முடிவடைந்த பின்னரும் மேற்குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்தோர் தங்கியிருந்தால் அவர்கள் இவ்விதியை மீறுவதாக கருதப்பட்டு தாம் செலுத்திய பிணைப்பணத்தை இழக்க நேரிடும் எனவும் அந்நாடு குறிப்பிட்டிருந் தது.

இந்நிலையிலேயே இது தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன் றன்கின்னுடன் வெளிவிவகாரச் செயலாளர் கருணாதிலக அமுனுகம பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது இப்புதிய விதி மூலம் பெரும்பாலான நுழைவு அனுமதி கோரி விண்ணப்பிப்பவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் எனவும் இதனால் அவர்கள் செலுத்திய பிணைப்பணத்தை மீள வழங்க முடியும் என பிரித்தானியத் தூதுவர் வாக்குறுதி அளித்ததாக கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நுழைவு அனுமதியைப் பெற்று வருடந்தோறும் சுமார் 35 ஆயிரம் வரையான இலங்கையர்கள் விண்ணப்பிப்பதாகவும் இவர்களில் மேல் படிப்புக்காக நுழைவு அனுமதியைக் கோரும் மாணவர்களே அதிகமாக உள்ளதாகவும் இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இதனிடையில் பிரித்தானியாவின் இப்புதிய விதி தொடர்பில் இந்தியாவும் நைஜீரியாவும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னர் 19 ஆவது திருத்தம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்விற்கு முன்னதாக 19 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்விற்கு முன்னர் திருத்தச் சட்டம் அமுல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பணிகள் ஆரம்பமாகும் எனவும் இதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்வதில் எவ்வித சிக்கல்களும் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதாக ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளதாகவும் ஏனைய கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஆதரவளிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஊழல் மோசடி விசாரணையை மோசடி செய்த பொலிஸார்

### 20 பேருக்கு இடமாற்றம்

ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்திய 20 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குருணாகல்–கதிர்காம வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசன் கோயில் குறித்த விசாரணைகளை நடத்திய பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் 20 பேருக்கே இவ்வாறு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் புத்தளம், வனாத்தவில்லு போன்ற பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நூறு கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை மோசடி செய்து அந்தப் பணத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆலய அறங்காவலர் சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள், இந்து சமய அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சிடம் செய்த முறைப்பாட்டை அடுத்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த விசாரணையை நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பத்து இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக் கொண்டு விசாரணைகளை மூடி மறைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

## யார் வந்தாலும் வராவிட்டாலும் தெரிவுக்குழு கூடுவது உறுதியே

### அமைச்சர் நிமால் திட்டவட்டம்

எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் 9 ஆம் திகதி கூடுவது உறுதியென குழுத் தலைவரும் சபை முதல்வருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் சர்வதேசமும் எத்தகைய அழுத்தங்களைப் பிரயோகித்தாலும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் சிறிதும் சளைக்காது எனவும் அவர் கூறினார்.

இத்தெரிவுக் குழுவில் தமிழ் கூட்டமைப்பு பங்குபற்றப் போவதில்லையென அறிவித்திருக்கிறது. அதுவொரு புதிய விடயமல்ல. எவர் வந்தாலும் வராவிட்டாலும் திட்டமிட்டபடி தெரிவுக்குழு கூடுமென வும் அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளாத விடத்தும் கூட எமது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதில் ஆளும் கட்சி சார்பில் 19 பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். இவற்றை தவிர எதிர்க்கட்சிகள் சார்பில் 12 உறுப்பினர்களை நியமிக்குமாறு தெரிவு செய்யப்பட்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

இதற்கு மேலதிகமாக எம்மால் எதனையும் செய்ய இயலாது. தமிழ் கூட்டமைப்பு அப்பாவி தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினையைத் திணிக் கிறது.

தெரிவுக்குழுவை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்தாலும் பேரவையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல எம்மிடம் இருக்கும் 19 உறுப்பினர்களும் போதுமானவர்கள் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பாக ஒருதலைப்பட்சமான தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதென அரசாங்கத்தை குற்றம் சுமத்தும் நோக்கிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமுகமளிக்காது பகிஷ்கரிப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். (அ-2)


## இலங்கை அரசியலின் மூன்றாவது சக்தி எனது கட்சி- சரத் பொன்சேகா

இலங்கை அரசியலின் மூன்றாவது சக்தியாக தனது கட்சி வளர்ச்சியடைந்துள்ளதாக ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத்பொன்சேகா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுமக்களை சந்தித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் எந்தவொரு கட்சியும் பொது மக்களின்நலன்கள் தொடர்பில் கரிசனை காட்டுவதில்லை. குடும்ப அரசியலும் அதிகார வெறியுமே அவர்களது நோக்கமாகவுள்ளது.

ஆனால், ஜனநாயக தேசிய முன்னணி மட்டும் இந்த நாட்டின் அனைத்து அடிமட்ட மக்களினதும் பிரச்சினைகள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளதுடன் அதற்காக தொடர்ந்தும் குரல் கொடுத்தும் வருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)



யா/உரும்பிராய் சைவ த்தமிழ் வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கணித முகாம் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆலோசகர்களான திருமதி டொறிங்டன், திருமதி சோதிநாதன் ஆகியோரை மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்பதையும் கணிதமுகாமில் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் காணி அபகரிப்பில் வன இலாகா அதிகாரிகள்



## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

**வன இலாகாவுக்குச் சொந்தமான காணிகளை அளந்து எல்லை போடுதல் என்ற பெயரில் வன்னியில் பொது மக்களின் பெருந்தொகையான காணி திட்டமிட்ட முறையில் அபகரிக்கப்படுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.**

படையினருக்கான காணி அபகரிப்பு, திட்டமிட்ட குடியேற்றம் என்பவற்றுக்கு மேலாக வன இலாகாவுக்குச் சொந்தமான காணி எனக் கூறப்பட்டு பெருமளவு காணிகள் பொதுமக்களிடமிருந்து அபகரிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வன்னியில் பல பகுதிகளிலும் வன இலாகாவுக்குச் சொந்தமான காணிகள் அளக்கப்பட்டு, அவற்றுக்கான எல்லைகளைப் போடும் நடவடிக்கைகள் வன இலாகா அதிகாரிகளால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்போது இப்பகுதியில் பல தலைமுறைகளாக வாழ்ந்துவரும் மக்களுடைய காணிகளும் வன இலாகாவுக்குச் சொந்தமான காணிகள் எனக் கூறப்பட்டு அபகரிக்கப்படுவதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களையடுத்து வன இலாகா அதிகாரிகளுடன் தான் தொடர்புகொண்டு கேட்டபோது, குறிப்பிட்ட காணி உரிமையாளர்கள் அவை தம்முடையவை என்பதை நிரூபிக்கும் வகையிலான ஆதாரங்களைக் கொண்டு வர வேண்டும் எனப் பதிலளிக்கப்பட்டதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஆனால், கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற போரினால் அனைத்தையும் இழந்து இடம்பெயர்ந்த மக்களின் காணி உறுதிகள் காணாமற் போய்விட்டதாக சிவசக்தி ஆனந்தன் கூறியதை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை.

இது தொடர்பில் சிவசக்தி ஆனந்தன் மேலும் தெரிவித்ததாவது,

வன இலாகா அதிகாரிகள் இலாகாவுக்குச் சொந்தமான காணிகளை அடையாளப்படுத்தி, அதன் எல்லைகளைக் குறிக்கும் வகையில் தூண்களை அமைத்து வருகின்றார்கள். இவ்வாறு எல்லைகளை அமைக்கும்போது பொதுமக்களுடைய காணிகள் பலவற்றையும் உள்ளடக்குகின்றார்கள். வன இலாகா அதிகாரிகள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை காரணமாக மேட்டுக் காணிகள் மற்றும் வயல் காணிகளைக் கொண்டுள்ளவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். இது தொடர்பில் அவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தபோது, உங்கள் காணிக்கான அத்தாட்சியைக் கொண்டு வருமாறு வனஇலாகா அதிகாரிகள் கேட்கின்றார்கள்.

ஆனால், 30 வருடகாலமாக இடம்பெற்ற போர் மற்றும் இடப்பெயர்வுகளின்போது இந்த மக்கள் தமது காணி அனுமதிப் பத்திரங்களை இழந்துவிட்டார்கள். இதனை மீள வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. மேலும், நீண்டகாலமாக புதிதாக காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படாததோடு, இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக வாழ்வோரது காணிகளும் இவ்வகையில் அடங்குவதாகவும் இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களுடைய காணிகளையும் சட்டரீதியாக அபகரிப்பதை நோக்கமாகக் கொண்டே அரசாங்கம் செயற்படுவதாகத் தோன்றுகின்றது.

இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்கள- முஸ்லிம் குடியேற்றங்கள் என்பவற்றுக்கு மேலாக தமிழர்களுடைய காணிகளை அபகரிப்பதற்காக அரசாங்கம் வகுத்துள்ள ஒரு உபாயமாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

அண்மையில் வேலங்குளம், பூவரசங்குளம், உசன், புளியங்குளம் போன்ற பல இடங்களில் இவ்வாறு மக்களுடைய காணிகள் பெருமளவுக்கு அபகரிக்கப்பட்டுள்ளன. வன இலாகா அதிகாரிகள் இராணுவத்தினருடன் வந்தே இந்தக் காணிகளை அபகரிக்கின்றார்கள். இப்பகுதிகளில் நான்கு, ஐந்து தலைமுறைகளாக இம்மக்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். போரால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்துள்ள மக்களின் ஒரே சொத்தாகவுள்ள அவர்களுடைய காணிகளையும் பிடுங்கிக்கொள்வதென்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இவ்விடயத்தை அரசாங்கம் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும் என்றார். (ம-250)

## டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வவுனியாவில் சிரமதானப் பணி

(குருமன்காடு)

வவுனியா பஸ் நிலைய வர்த்தக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் டெங்கொழிப்பு வாரத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணி இடம்பெற்றது.

வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், தொழிலாளர்கள் இணைந்து நகரசபை மற்றும் சுற்றுச்சூழல் பொலிஸாரின் அனுசரணையுடன் இச்சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக வவுனியா பஸ் நிலையத்தில் வர்த்தகர்கள் எதிர்



நோக்கி வந்த பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு இதன்போது தீர்வு காணும் நோக்குடன் பொலிஸாருடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர். (ம-250-266)

## உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா சுந்தரபுரம் பிரதேசத்தில் உள்ள காட்டுப்பாங்கான பகுதியில் உருக்குலைந்த நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் அண்மையில் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா சுந்தரபுரம் காட்டுப் பகுதியில் சடலம் ஒன்றை இனங்கண்ட கிராமத்தவர்கள் பொலிஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட சடலம் கடந்த வாரம் வீட்டில் முரண்பட்டுக்கொண்டு சென்றவரது சடலம் என ஆரம்பகட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மீட்கப்பட்டவர் 4ஆம்



வட்டாரம் சுந்தரபுரத்தைச்சேர்ந்த ஜேமிஸ்ஜேசுதாசன் (63வயது) என்பவரது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)




## துணை வீதிகள் அமைக்கப்படாமையால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை

### பயணிகள் அவதி

(பூநகரி)

பூநகரி முக்கொம்பன் வீதியில் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்ற நிலையில் துணை வீதிகள் அமைக்கப்படாமையால் எந்தவொரு வாகனங்களும் தொடர்ந்து செல்ல முடியாமல் உள்ளதுடன் வேறு பிரதேசங்களிலிருந்து வரும் உத்தியோகத்தர்களும் அனைத்து பயணிகளும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த ஒரு மாத காலமாக முக்கொம்பன் வீதியில் பாலங்கள் கட்டும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்வாறான பாலங்கள் கட்டப்படும்போது பயணிகள் போக்குவரத்திற்கு தடையில்லாமல் துணை வீதிகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால், இப்பகுதியில் துணை வீதிகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இந்நடவடிக்கையால் அன்றாடம் பூநகரி, முக்கொம்பன் ஊடாக செல்கின்ற ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் என அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் காலை 6 மணிக்கு புறப்படும் பூநகரி-முக்கொம்பன் ஊடாக அக்கராயன் வரை செல்லும் பேருந்தில் பணிக்காக சென்று வந்தனர். ஆயினும் தற்போது மேற்படி வீதியில் பாலங்கள் அமைக்கப்படும் நிலையில் துணை வீதிகள் போடப்படாமையால் அரச பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி [illegible] பின்னர்தான் தமது அலுவலங்களுக்குச் செல்கின்றனர்.

குறிப்பாக அக்கராயன் மகா வித்தியாலயம், முக்கொம்பன் அ.த.க. பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருப்பதால் அக்கிராமத்திலேயே தங்கியிருந்து பணியில் ஈடுபட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

ஆகவே, போக்குவரத்து சிக்கலால் ஏற்பட்டுள்ள அவல நிலையைக் கருத்திற் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் முக்கொம்பன் வீதிக்கு அருகில் துணை வீதிகளை அமைத்து வழமையான போக்குவரத்து வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என உத்தியோகத்தர்களும் பிரயாணிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-9-84)



வவுனியா வடக்கு பிரதேச செயலக ஊழியர்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் மற்றும் முதலுதவி தொடர்பான பயிற்சி நெறி பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா பிரதேச செயலர் வி.ஆயகுலன் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பூந்தோட்டம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவையாளர்களுக்கு நிரந்தர கட்டடம் இல்லை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களின் கீழுள்ள கிராமங்களில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு நிரந்தர கட்டடம் இல்லை என அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 46, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 19, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 15, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 20, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 27 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன.

இதில் ஒரு கிராம சேவையாளர் பிரிவுக்குக்கூட நிரந்தர கட்டடம் இன்மையால் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் இடம்பெற்ற மேற்குறித்த மாவட்டத்தில் இன்றுவரை கிராம சேவையாளருக்கு என நிரந்தர கட்டடம் அமைக்கப்படாதது வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு நிரந்தர கட்டடம் இன்மையால் பொதுநோக்கு மண்டபம், கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் தனியார் காணிகள், மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றிலேயே கிராம அலுவலர்களுக்கான கட்டடம் மாறி மாறி இயங்கி வருகின்றன.

இவ்வாறு மாறி மாறி கிராம அலுவலர் கட்டடம் இயங்கி வருவதால் மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

போரினால் அனைத்தையும் இழந்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத மக்கள் வாழ்வாதார உதவிகள் மற்றும் ஏனைய உதவிகளை பெறுவதற்கு கிராம அலுவலர்களையே நாடிச் செல்ல வேண்டிய கடப்பாடு உள்ளது.

இவ்வாறு கிராம அலுவலருக்கு நிரந்தர கட்டடம் இன்மையால் பணம், நேரம் என்பவற்றை செலவு செய்தே தூர இடத்திலுள்ள தற்காலிக அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலையுள்ளது. கிராம அலுவலகங்களுக்கென அரச காணிகளும் இல்லாத நிலையும் உள்ளது.

வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒரு கிராம சேவையாளருக்கான நிரந்தர கட்டடம் அரச காணியில் நிர்மாணிக்கப்பட்டு அக்கட்டடத்தில் சுகாதார நிலையம், சமுர்த்தி அலுவலகம், கிராம அலுவலருக்கான அலுவலகம் என்பன இயங்கி வருகின்றன.

இவ்வாறு மக்கள் அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு அரச காணியில் நிரந்தர கட்டடத்தை அமைத்து உதவுமாறு முல்லை. மாவட்ட அரச அதிபரிடம் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## பயிற்சிப் பட்டறையும் கண்காட்சியும்


(சிவநகர்)


கரைச்சி பிரதேச செயலக கலாசார பேரவையும் காவேரி கலா மன்றமும் இணைந்து நடத்தும் ஓவியப் பயிற்சி பட்டறையும் புகைப்படக் கண்காட்சியும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் 6 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையும் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஓவியக் கலை ஆர்வலர்கள், புகைப்படக் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு கரைச்சி பிரதேச செயலக கலாசார பேரவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-254)






யோ.புரட்சி எழுதிய இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய் கவிதை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு அண்மையில் வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயத்தில் சூரியன் ஒலிபரப்பு சேவையின் அறிவிப்பாளர் முகுந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூலின் சிறப்பு பிரதியை ஐ.ஓ.எம். நிறுவன கிளிநொச்சி மாவட்ட இயக்குநர் வேதாரணியம் வழங்க வவுனியா மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பத்மாரஞ்சன் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## வவுனியாவில் சுவரொட்டி




(குருமன்காடு)

வவுனியா நகரமெங்கும் சகோதரத்துவத்தின் மக்கள் அமைப்பினால் சுவரொட்டிகள் ஒட்டபட்டிருந்தன. வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த கோரியும் மக்களின் எரியும் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்க வலியுறுத்தியும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. (ம-250)

## பயிற்சி நெறி

(சிவநகர்)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறிகள் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன் சமுர்த்தி அதிகார சபை அலுவலர் பா.நடேசராசா பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றார்.

இப்பயிற்சி நெறியில் வட்டக்கச்சி, அக்கராயன், கிளிநகரம், கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி, ஜெயபுரம் ஆகிய ஏழு சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றவுள்ள 61 அலுவலர்கள் பங்குபற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-9-254)

## கன்ரர்-ஹயஸ் விபத்து

முறிகண்டிபிள்ளையார் கோவில் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கன்ரர் வாகனத்துடன் ஹயஸ் மோதிவிபத்துக்குள்ளானதில் ஹயஸ் வாகனத்தில் வந்தவர்கள் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது,

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 3 மணியளவில் ஏ-9 வீதியிலுள்ள முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கன்ரர் வாகனத்துடன் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் ஹயஸ் வாகனத்தில் வந்தவர்கள் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி மாவட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## கும்பாபிஷேக மலர் வெளியீடு

(பூநகரி)

பூநகரி பத்தினியார்காடு வரசித்தி விநாயக ஆலய சங்காபிஷேக நிகழ்வும் கும்பாபிஷேக மலர் வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளதாக பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் தா.அரியரத்தினம் (ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பூநகரிப்பகுதி ஆலய பரிபாலன சபையினரையும் தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ம-84)

## முல்லைத்தீவு-மட்டக்களப்பு பஸ் சேவை நேற்று ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-மட்டக்களப்புக்கான இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இ.போ.சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் ஏ.அஸ்கரினால் இச்சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி முல்லைத்தீவிலிருந்து மாலை 4.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் பேருந்து சேவை இரவு 7 மணிக்கு வவுனியாவை சென்றடைந்து பின்னர் இரவு 7.30 மணிக்கு வவுனியா மட்டக்களப்பு ஊடாக அக்கரைப்பற்றை அதிகாலை 4 மணிக்கு சென்றடையும். மீண்டும் அதே வழியாக இரவு 7 மணிக்கு ஆரம்பிக்கும் பேருந்து சேவை காலை 6 மணிக்கு முல்லைத்தீவை வந்தடையும். இவ் அரச பேருந்தின் வழித் தட இலக்கம் 86 என்பதுடன் ஒருவழிப் பயணக் கட்டணமாக 496 ரூபா அறவிடப்படும்.

இப்பேருந்து சேவை ஆரம்ப நிகழ்வில் முல்லைத்தீவு சாலை முகாமையாளர் க.சிறினிவாசன் இ.போ.ச உத்தியோகத்தர்கள் நடத்துநர்கள் சாரதிகள் என பலர் கலந்து கொண்டனர். (எ-267)

## பாவனைக்கு உதவாத மரக்கறிகள் விற்பனை

கிளிநொச்சி மாவட்டத்தின் பொதுச்சந்தையில் விற்பனைக்கு உதவாததென்று ஒதுக்கி விடப்படுகின்ற மரக்கறி வகைகளை அங்கு வேலையில் ஈடுபடுகின்ற சிலர் உணவகங்களிலும் வெளியிடங்களிலும் வைத்து விற்பனை செய்து வருவதாக வியாபாரிகளால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி சந்தையில் வியாபாரிகளினால் பழுதடைந்த மரக்கறி வகைகள் கழிவுத் தொட்டியினுள் இடப்படுகின்றன.

இக்கழிவு மரக்கறிகளை அங்கு வேலையில் ஈடுபடுகின்ற சிலர் எடுத்துச் சென்று விற்பனை செய்கின்றனர்.

இவ்வாறாக விற்பனை செய்யப்படுகின்ற மரக்கறி வகைகளை சில உணவகங்கள் இலாப நோக்கில் பெற்றுக் கொள்வதனால் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதுடன் சுகாதார சீர்கேடுகளும் உணவகங்களில் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன என்பதை உரிமையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.



அதுமட்டுமன்றி கழிவு மரக்கறி வகைகளை வீதியோரங்களில் குறைந்த விலைகளில் விற்பதால் பொதுமக்களும் வாங்கிச் செல்கின்றனர்.

எனவே, இந்நடவடிக்கைகளை உடனே நிறுத்த உரியவர்கள் முன்வருவதுடன் பொதுமக்களும் உணவக உரிமையாளர்களும் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் சந்தை வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-9)

## பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய வருடத்துக்கான நிர்வாகத்தினர் தெரிவு செய்யப் படவிருப்பதால் இடம்பெயர்ந்திருக்கும் பழைய மாணவர் உட்பட சகலரையும் பங்குபற்றுமாறு செயலாளர் அறிவித்துளார். (ம-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் 4 இடங்களில் குண்டு வெடிப்பு சம்பவங்கள்

## 53 பேர் பலி ;109 பேர் காயம்

**(இஸ்லாமாபாத்)**

**லண்டன் பிரதமர் டேவிட் கமரூனின் பாகிஸ்தான் வருகையை அடுத்து ஒரே நாளில் நான்கு குண்டு வெட்டிப்புச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இதில் 53 பேர் பலி யானதுடன் 109 பேர் காயமடைந்தனர்.**

பாகிஸ்தானுக்கு தீவிரவாத ஒழிப்பு மற்றும் அமைதி பேச்சு வார்த்தைக்கு நேற்று முன்தினம் வருகை தந்த டேவிட் கமரூனுக்கு எதிர்ப்பு தெரிவித்து தீவிரவாதிகள் தலைநகர் இஸ்லாமாபாத்தில் குண்டு வெடிப்பு நடத்தியுள்ளனர்.



இந் நிலையில், பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் ஒரேநாளில் தீவிரவாதிகள் 2 குண்டு வெடிப்பு சம்பவங்களை நிகழ்த்தியுள்ளனர். பலுசிஸ்தான் மாகாண தலைநகர் குவெட்டா அருகேயுள்ள ஹஷாரா நகரில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகமாக உள்ளனர். அன்றைய தினம் மாலை அங்குள்ள மசூதியில் தொழுகை முடித்துவிட்டு ஏராளமானவர்கள் வெளியே வந்து கொண்டிருந்தபோது அதன் அருகேயுள்ள சோதனை சாவடியில் தற்கொலைப் படை தீவிரவாதிகள் புகுந்து தங்கள் உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இச்சம்பவத்தில் 28 பேர அதே இடத்தில் உடல் சிதறி பலியாகினர். 51 பேர் காயம் அடைந்தனர். பலியானவரகளில் 9 பேர் பெண்கள், 5 பேர் சிறுவர், சிறுமியர் ஆவர்.

குவெட்டா பகுதி தலிபான்களின் ஆதிக்கம் நிறைந்தது. எனவே, இத்தாக்குதலில் அவர்கள்தான் ஈடுபட்டிருக்க வேண்டும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை வடமேற்கு



பாகிஸ்தானில் பெஷாவர் புறநகரில் சக்தி வாய்ந்த கார் குண்டு வெடித்தது. அதில் 17 பேர் உயிரிழந்தனர். 46 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 4 குழந்தைகள் மற்றும் ஒரு பெண்ணும் அடங்குவர்.

மேலும் அங்கு நிறுத்தப் பட்டிருந்த கார்கள், கடைகள் சேதம் அடைந்தன. சேத இடிபாடுகளும், இரத்தமும் சதையுமாக அப்பகுதி காட்சி அளித்தது. இவை தவிர தெற்கு வசிரிஸ்தானின் வானா நகரில் வீதியோரம் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 4 பேர் உயிரிழந்தனர்.

வடக்கு வசிரிஸ்தானில் மிர்அலி நகரில் வீதியோரம் குண்டு வெடித்ததில் 4 இராணுவ வீரர்கள் பலியாகினர். 12 பேர் காயம் அடைந்தனர். (அ-2)

# ஒருகோடி மக்களுக்கு எயிட்ஸ் நோய் பாதிப்பு

(ஜெனீவா)

உலகம் முழுவதும் எயிட்ஸ் நோயால் ஒரு கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. சபை அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளது.

எயிட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய் உலகை அச்சுறுத்தி வருகிறது. இந்த நோய் கடந்த 32 ஆண்டுகளாக பரவி வருகிறது. கடந்த 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி உலக அளவில் எயிட்ஸ் நோய் பாதித்தவர்களில் 70 சதவீதம் பேர் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

தற்போதைய கணக்கெடுப்பின்படி ஒரு கோடி பேரை கடுமையான எயிட்ஸ் தாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எயிட்ஸ்



நோய்க்கு மருந்து மாத்திரைகள் சாப்பிட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்த தகவலை ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

மேலும் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் 65 இலட்சம் பேர் எயிட்ஸ் நோயால் மரணம் அடைவர். அல்லது பாதிக்கப்படுவர் என்றும் கூறப்பட்டுள்ளது. அவற்றை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளதாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. (அ-2)

# சவுதியிலிருந்து 75 ஆயிரம் இந்தியர்கள் நாடு திரும்புவர்

புதிய தொழிலாளர் சட்டத்தால சவுதி அரேபியாவில் இருந்து 75 ஆயிரம் இந்தியர்கள் விரைவில் தாய்நாடு திரும்பவுள்ளனர்.

அரபு நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவில் சுமார் 2 இலட்சம் இந்தியர்கள் வசிகக்கின்றனர். அங்கு உள்நாட்டு மக்களுக்கான வேலைவாய்பபை அதிகரிக்கும் விதமாக, அந்நாட்டு அரசு புதிய அவசர சட்டம் ஒன்றை பிறப்பித்துள்ளது. அதாவது சவுதிஅரேபியாவில செயற்படும் நிறுவனங்கள், தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் 10 வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு ஒரு உள்நாட்டு இளைஞர் என்ற விகிதத்தில் பணியமர்த்த வேண்டும் என் பதுதான் அந்தச் சட்டம்.

எனவே, பணி அனுமதி இல்லாது சவுதிஅரேபியாவில் தங்கியுள்ள இந்தியர்களை, அங்கிருந்து இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும் வேலையில் இந்திய தூதரகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இந்தியர்களுக்கு ஏற்கனவே இந்திய தூதரகம் சார்பில் தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

பணி அனுமதி இல்லாதவர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என சவுதிஅரசு எச்சரித்துள்ளது. இதனால்75 ஆயிரம் இந்தியர்கள், தாயகம் திரும்புவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளனர். அவரகளுக்கான சான்றிதழ் வழங்கும் பணிகளும் நடைபெறுகின்றன. சவுதி அரேபிய அரசின் புதிய தொழிலாளர் சட்டத்தின் நெருக்கடியால், வேலை இழக்கும் 75 ஆயிரம் இந்தியர்கள், விரைவில் தாயகம் திரும்பவுள்ளனர். (அ-2)

# தீயணைக்க சென்ற வீரர்களை தீயே காவு கொண்டது

அமெரிக்காவில் காட்டுத் தீயை அணைக்கச் சென்ற தீய ணைப்பு வீரர்கள் 19 பேர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்க அரிசோனா காட்டுப்பகுதியில் கடந்த வெள்ளியன்று தீ பிடித்துக்கொண்டது. அந்தத் தீயை கட்டுப்படுத்த சிறப்பு பயிற்சி பெற்ற தீயணைப்பு வீரர்கள் களத்தில் இறங்கினர். மளமளவென பரவிய அந்த தீயானது சுமார் 2ஆயிரம் ஏக்கர் காடுகளை நாசமாக்கியது.


மிக வேகமாகப் பரவிக் கொண டிருந்த தீயை கட்டுபபடுத்த தீவிர முயற்சி மேற்கொண்டனர். ஆனால், கடுமையான வெப்பம், வேகமாக வீசிய காற்று ஆகியவற்றால், தீ மளமளவென நகராங்களுக்கும் பரவி, 500 இற்கும் மேற்பட்ட வீடுகளை நாசமாக்கியது. தீயை அணைக்கும் பணியில 19 வீரர்கள் ஈடுபட்டிருந்தனர. அப்போது திடீரென பரவிய தீயில் அவர்கள் சிக்கிக் கொண்டனர். வெளியேற முடியாமல் தவித்த 19 பேரும் தீக்கிரையாகினர்.

தீயிலிருந்து மக்களையும், சொத்துக்களையும் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தங்கள் இன்னுயிர்களை தியாகம செய்து வீரமரணம் அடைந்த அந்த 19 பேருக்கும் ஜனாதிபதி பராக் ஒபாமா புகழஞ்சலி செலுத்தினார. அரிசோனா காட்டுப்பகுதியில் மின்னல் தாக்கியதால், இந்த காட்டுத் தீ பிடித்ததாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)



தென் ஆபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, தென் ஆபிரிக்கா யூனியன் கமிஷனின் பெண் தலைவர் டிலாமினி ஜூமாவை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதில் தாஜ்மஹாலுக்கு 3 ஆவது இடம்



உலக அளவில் அதிக சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் இடங்களின் வரிசையில் தாஜ்மஹால் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது.

டிரிப் அட்வைசர்ஸ் என்ற சர்வதேச நிறுவனம், 2013 ஆம் ஆண்டில் சுற்றுலா பயணிகளின ஆர்வத்தை தூண்டும் இடங்கள் தேர்வு பற்றி ஆய்வு செய்தது. இதன் முடிவில 25 முக்கிய சுற்றுலா தலங்களை பட்டியலிட்டது. அதில் பெரு நாட்டைச் சேர்ந்த மச்சு பிச்சு, கம்போடிய நாட்டில் உள்ள அங்கோர் வாட் கோயில் ஆகியவற்றுக்கு அடுத்து 3ஆவது இடத்தில் தாஜ்மஹால் உள்ளது.

தாஜ்மஹால் புதிய 7 உலக அதிசயங்களில் ஒன்றாகும். முகலாய மன்னன் ஷாஜகான் தனது அன்பு மனைவியின் நினைவாக வெள்ளை பளிங்கு கற்களால் ஆக்ராவில் யமுனை நதிக்கரையில் கட்டியதே இந்த தாஜ்மஹால்.

1983 ஆம் ஆண்டில் தாஜ்மஹால் உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் இங்கு 20 முதல் 40 இலட்சம் சுற்றுலாப பயணிகள் வந்து செல்கின்றனர். அவர்களில் 2 இலட்சம் பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். ஜோர்டான் நாட்டில் உள்ள பெட்ரா, கம்போடியாவில் உள்ள பேயன் கோயில் ஆகியவை முறையே 4 மற்றும் 5ஆம் இடத்தை வகிக்கின்றன. (அ-2)

# மின்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பாக். அமைச்சர் இந்தியா வருகை

(இஸ்லாமாபாத)


மின் பற்றாக்குறைக்கு தீர்வுகாண பாகிஸ்தான் மின்சார அமைச்சர் கவாஜா முஹமது ஆசிப் இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார்.

பாகிஸ்தானில் தினமும் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் மெகாவோட் வரை மின் பற்றாக்குறை நிலவுகிறது. சமீபத்தில் அங்கு பிரதமராக பதவி ஏற்ற நவாஸ் ஷெரீப், மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதே தனது முக்கியமான நோக்கம் என்று கூறினார்.

இதை நிவர்த்தி செய்ய 500 மெகாவோட் மின்சாரம் வழங்குமாறு இந்தியாவிடம் பாகிஸ்தான் கேட்டுக் கொண்டது. அதன்படி உயர் அழுத்த மின் பாதை மூலம் பஞ்சாப் மாநிலம் வழியாக லாகூருக்கு மின்சாரத்தை கொண்டு செல்ல இந்தியா முடிவு செய்தது. இந்த திட்டம் குறித்து ஆராய கடந்த மாதம் இந்திய குழு ஒன்று பாகிஸ்தான் சென்றது.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக பாகிஸ்தான் நீர் வளம் மற்றும் மின்சாரத் துறை மந்திரி கவாஜா முஹமது ஆசிப் இந்தியா வந்து பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து அமைச்சர் கவாஜா முஹமது ஆசிப் விரைவில் இந்தியா வருவார்



எனத் தெரிகிறது.

அத்துடன் இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவுகளை பேண விரும்புவதாக பாகிஸ்தானின் புதிய பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்துள்ளார்.

இந்திய மற்றும் பாகிஸ்தான் வர்த்தகப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட சந்திப்பில் உரையாற்றிய நவாஸ் ஷெரீப் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நட்பு நாடு என்ற ரீதியில் செயற்படுவது குறித்து தமது கட்சி கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக பாகிஸ்தான் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நீண்ட காலமாக பிரச்சினைகள் தொடர்வதுடன், அடிக்கடி கருத்து முரண்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இந்தியாவுடனான உறவுகளின் அவசியம் குறித்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கவனம் செலுத்தி வருகின்றார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவு மட்டும் கூறும் வழியில் செல்லாதே.
ஆன்மா ஆணையிடும் வழியில் செல்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## காசிக்குச் சென்ற யோகர் கடவுளைக் கண்டது எங்கே?

எங்கள் மண்ணில் நடமாடிய ஞானகுரு தவத்திரு யோகர் சுவாமிகள்.

அவர் அருளிய நற்சிந்தனைகள் இம்மைக்கும் மறுமைக்கும் எங்களை வழிப்படுத்துவன.

தவத்திரு யோகர் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை அறிந்த ஆங்கிலேயர் சைவ சமயத்தின் பால் ஈர்க்கப்பட்டனர்.

அதன் விளைவாக அமெரிக்காவில் உள்ள ஹவாயில் ஆச்சிரமம் அமைக்கப்பட்டு இன்றும் அதன் பணி தொடர்கிறது.

எங்கள் ஞானகுருவாகிய தவத்திரு யோகர் சுவாமிகளின், பேரருள் அமெரிக்காவிலும் சிவாய நம என்னும் நாமத்தை சொல்ல வைத்தது என்றால்;

யோகர் சுவாமிகளின் அருட்பெரும் திறத்தை நினைந்து நினைந்து பெருமையடையும் பாக்கியம் பெற்றவர்கள் நாங்கள்.

ஆனாலும் அந்தப் பெருமையை - யோகர் சுவாமிகளின் தவவலிமையை எங்களில் அறிந்தவர்கள் எத்தனை பேர். அதிலும் குறிப்பாக எங்கள் இளைஞர் சமூகம் யோகர் சுவாமிகள் பற்றி அறிந்தவை ஏதேனும் உண்டா? என்ற வினாக்களுக்கான விடை வேதனை தருவதாகவே இருக்கும்.

எனினும் தவத்திரு யோகர் சுவாமிகளின் வரலாற்றை அறிவதும், அவரை ஞான குருவாக வழிபடுவதும் அவசியமானதென்பதை அவரின் தீர்க்க தரிசனம் நமக்கு உணர்த்தி நிற்கும்.

இந் நிலையில், யோகர் சுவாமிகள் காசிக்குச் சென்றிருந்த சமயம் யாழ்ப்பாணத்தாருக்கு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் எழுதப்பட்ட பல விடயங்கள் நடந்து முடிந்துள்ளன.

....... காசியில் கடன் செய்துவிட்டேன் என சுவாமிகள் எழுதிய வாசகம் 2009இல் நடந்த வன்னி பேரவலத்தை சுட்டி நிற்பதாக ஆத்ம ஞானம் உணர்ந்தோர் கூறுவர்.

காசிக்குச் சென்ற சுவாமிகள் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு எழுதிய கடிதத்தில்,

காசிக்குச் சென்ற நான் கடவுளை எனக்குள்ளே கண்டேன் என்று குறிப்பிட்டிருந்தார். இங்குதான் யோகர் சுவாமிகள் மகா தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றார்.

அதாவது நான் கடவுளைக் காண்பதற்காக - வழிபடுவதற்காக காசிக்கு வந்திருந்தாலும் நான் கடவுளை என்னுள்ளே தான் கண்டேன்.

ஆக, காசிமட்டும் அல்லகைலாயம் சென்றாலும் கடவுளை எங்களுக்குள்ளேதான் காண வேண்டும். இதை யாழ்ப்பாணத்திலிருந்தும் கண்டிருக்கலாம் என்பது அவரின் முடிபு.

இந்த முடிபோடு எங்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு கணம் ஒப்பிட்டு சிந்தித்தால், தீர்வு என்பது எங்களுக்குள் ஏற்பட வேண்டும்.

ஆனாலும் எங்களுக்குள் தீர்வு ஏற்படவில்லை. நாங்கள் இனப்பிரச்சினையை எங்கள் வாழ்வுக்கான முதலீடாக, பதவிக்கான களமாக கருதிக் கொள்கிறோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்கண்டு, எங்கள் மக்களை, எங்கள் நாட்டை வளமுள்ளதாக்க வேண்டும் என்ற சிந்தனை எங்களுக்குள் ஏற்படாமல், வேறு எந்த நாட்டுக்குச் சென்றாலும் பிரயோசனம் ஏற்படப் போவதில்லை.

இங்கு நாங்கள் என்பது இந்த நாட்டின் ஒட்டுமொத்த அரசியலையும் குறிப்பதாகும்.

# முதலமைச்சர் வேட்பாளராக மாவையை நிறுத்த வேண்டும்

## யாழ்.கூட்டமைப்பு கிளை சம்பந்தனிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர்வேட்பாளராக நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து இலங் கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்டக்கிளையினால் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ் மாவட்டக் கிளையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலின் இறுதியில் முக்கியமான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைத்தேர்தல் நடக்கலாம். நடக்காமலும் போகலாம். ஆனால் தேர்தல் நடந்தால் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் சார்பாக முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவைத் தான் நிறுத்த வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தி தலைவர் சம்பந்தனுக்கும் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜாவிற்கும் பதிவுத் பாலில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர்களோடு பழகியவர் என்ற வகையிலும் தமிழ்த் தேசிய உணர்வாளராக பல போராட்டங்களில் பங்கு கொண்டவர் என்ற வகையிலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவைத்தான் நிறுத்த வேண்டும் என அந்தக் கடிதத்தில் வலியுறுத்தி யுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஊடகவியலாளர்கள் பல கேள்விகளை எழுப்பியதோடு துணைப் பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானத்தின் நிலைப்பாடு குறித்தும் கேட்டபோது தேர்தலில் தானும் போட்டியிடவுள்ளதை மீண்டும் உறுதிப்படுத்தினார். (அ-6)

## பாதிக்கப்பட்ட பெண்களை கவனிக்க அமைப்பு உருவாக்கம்

இன்றைய சமூகம் முகம்கொடுக்கும் பாரிய சமூகப் பிரச்சினைகளாக பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், குடும்பவன்முறைகள் என்பன காணப்படுகின்றன. இது சமூக ரீதியாகவும், கலாசாரரீதியாகவும் பாரதூரமான விடயமாக நோக்கப்படுகின்றது. இவ்விடயம் அனைத்து இனங்களுக்கும் மதங்களுக்கும் பொதுவானதாகக் காணப்படுகின்றது. இவர்களது பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணப்படும் போது இப் பெண்கள் தமது சமூகத்தின் சொத்தாகச் செயற்படக் கூடிய ஏது நிலையும் ஏற்படும்.

இதற்கமைய சமூக பராமரிப்பு நிலையமாக (Social care dropping centre) ஊரெழுவில் அமைந்துள்ள மனித உரிமை அமைப்பு உள்ளதாக ஊரெழு மனித உரிமை நிலைய மாவட்ட அதிகாரி த.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இவ்அலுவலகமானது வார நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை திறந்திருக்கும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இவ்வமைப்பின்மூலம் பாதிக்கப்பட்ட பெண்கள் ஒன்றுசேர்ந்து தமது பிரச்சினைகளைக் கலந்துரையாடி அதற்கென உள்ள துறைசார் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி தம் மனதிற்கு ஆறுதல் பெற்றுக்கொள்ளவும் தமது ஆற்றல்களையும் வாழ் வாதார நிலைகளையும் மேம்படுத்தவும் முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 021 224 0999, 021 222 8030 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (அ)

# 13 ஐ முழுமையாக ஒழிக்க 2014 இல் ஜனாதிபதித் தேர்தல்

## மனோகணேசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

2014ஆம் வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி 13ஆம் திருத்தத்தை முற்றாக ஒழிக்க மக்கள் ஆணையை பெற அர சாங்கம் திட்டமிட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை நாட்டுக்குள் வர அனுமதித்து, செப்டம்பர் மாதம் வட மாகாணசபை தேர்தலை நடத்தி, நவம்பர் மாதம் பொது நலவாய தலைவர்களது மாநாட்டையும் நடத்தி விட்டு அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசாங்கம் முடிபு செய்துள்ளது.

இதற்காகவே ஜனாதிபதி தேர்தலை முன் கூட்டியே நடத்துவதற்காக 19 ஆம் திருத்தத்தை அரசியலமைப்புக்கு கொண்டு வர இன்று அரசாங்கம் கூட்டி செயல்படுகிறது.

இதன்மூலம் நாட்டில் இனவாதத்தை கிளப்பி அதிகார பகிர்வு என்ற கொள்கையையே இலங்கை அரசியலிருந்து அகற்றும் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளன. என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது, 13ஆம் திருத்தத்தை அமுல்செய்வதாக, ஐநா சபைக்கும் இந்திய தலைவர்களுக்கும் வழங்கிய வாக்குறுதிகளை புதிய மக்கள் ஆணையை பெறுவதன் மூலம் செல்லுபடியற்றதாக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது.

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவை மாநாட்டுக்கு முன்னதாகவா அல்லது அதற்கு பின்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது என்று இன்னமும் முடிவாகவில்லை.

நாட்டில் இன்று பொலிஸ், காணி அதிகாரங்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்களை நடத்திவித்து கொண்டு மக்களின் கவனத்தை அரசாங்கம் திசைதிருப்பியுள்ளது.

இந்த சந்தடியில் விரைவில் கொண்டு வரப்பட உள்ள 19ஆம் திருத்தத்தின் மூலம் முதல் நான்கு வருடங்களுக்கு பிறகு நடத்தப்படலாம் என்று இருக்கின்ற ஜனாதிபதி தேர்தலை முதல் மூன்று வருடங்களுக்கு பிறகு நடத்தலாம் என அரசு தீர்மானித்துள்ளது.

எனவே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் அனைத்து இனவாத அமைப்புகளையும் அரவணைத்து கொண்டு அரசாங்கம் களமிறங்க போகின்றது.

இந் நிலையில் அதிகார பகிர்வு கொள்கையை ஏற்றுக்கொண்டு அரசாங்கத்துக்கு உள்ளே இன்று இருக் கும் தமிழ், முஸ்லிம், இடதுசாரி கட்சிகளுக்கும் தீர்க்கமான முடிபுகளை எடுக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என தெரிவித்தார். (எ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தப்பி ஓட நினைக்காதே!



✦ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை நிறைந்த மூளை, வேலை செய்யும் கைகள் மூன்றும் நமக்குத்தேவை.

✦ நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள்.

✦ ஒருவருக்கொருவர் நன்மை செய்வதன்மூலமாகத்தான் நற்பலன்களை அடையமுடியும்.

✦ மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கே செல்லவும் தயாராக இருக்கவேண்டும். மரணம் ஒருநாள் உறுதி என்னும் போது நல்ல செயலுக்காக உயிரை விடுவது மேலானது.

✦ பெரியவர்கள் பலர் செய்த தியாகத்தின் பயனையே இன்று மனிதகுலம் அனுபவிக்கிறது. இந்த உண்மையை உலகம் முழுவதிலும் காணமுடியும்.

✦ உன் சொந்த முக்திக்காக நீ உலகத்தைத் துறந்துவிட விரும்பினால் அது ஒன்றும் பாராட்டத்தக்கது அல்ல. ஆனால் உலக நன்மைக்காக உன்னை நீயே தியாகம் செய்ய முடியுமானால் கடவுளாகிவிடுவாய்.

✦ உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பியோட முயற்சிக்காதே. தியாக உள்ளத்துடன் சேவையில் ஈடுபடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விறுவிறுப்பாக நடைபெற்ற கொன்பெடரேஷன் கிண்ண இறுதி ஆட்டத்தில்

# உலகச் சம்பியனை வீழ்த்தி பிரேசில் ‘ஹெட்ரிக்’ சாதனை



கொன்பெடரேசன் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரேசில் வீரர்களின் தாக்குதல் ஆட்டத்துக்கு உலக மற்றும் ஐரோப்பிய சம்பியனான ஸ்பெயின் அணியால் தாக்குபிடித்து விளையாட முடியவில்லை. இந்த ஆட்டத்தில் 3-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி தொடர்ந்து 3ஆவது முறையாக கொன்பெடரேசன் கிண்ணத்தை வென்று ‘ஹெட்ரிக்’ சாதனை படைத்தது பிரேசில் .

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பித்த இந்த ஆட்டத்தில், பிரெட் 2 கோலும் (2ஆவது நிமிடம், 47ஆவது நிமிடம்) நட்சத்திர வீரர் நெய்மார் ஒரு கோலும் (44ஆவது நிமிடம்) அடித்தனர். ஸ்பெயின் அணியால் ஒரு கோல்கூட அடிக்கமுடியாமல்போனது. 55ஆவது நிமிடத்தில் பெனால்டி மூலம் கிடைத்த அரிய வாய்ப்பை செர்ஜி ராமோஸ் தவறவிட்டார்.

முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டதற்காக 68ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் பிகே நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

பிரேசில் அணி ஸ்பெயினை வீழ்த்தியதன் மூலம் தொடர்ந்து 26 ஆட்டத்தில் வென்று வந்த ஸ்பெயின் அணி தோல்வியை தழுவியுள்ளது. கடைசியாக 2011ஆம் ஆண்டு லண்டனில் நடந்த காட்சி போட்டியில் இங்கிலாந்திடம் 0-1 என்ற கணக்கில் தோற்றது.

ஸ்பெயின் அணி 2010 உலக கிண்ணம் மற்றும், 2008, 2012 ஐரோப்பிய கிண்ணத்தை வென்றிருந்தது. இந்தப் போட்டி தொடரில் ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டொரஸ் தங்கச் சப்பாத்தையும் , பிரேசில் வீரர் பிரேட் வெள்ளி சப்பாத்தையும், மற்றொரு பிரேசில் வீரர் நெய்மார் வெண்கல சப்பாத்தையும் பெற்றனர்.

**3 ஆம் இடம்**

3 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இத்தாலி, உருகுவே அணிகள் மோதின. இதில் இத்தாலி 3-2 என்ற கணக்கில் வென்று 3ஆவது இடத்தை பிடித்தது.

முதல் பாதியில் டேவிட் அஸ்டோரி (24ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க, இத்தாலி அணி 1-0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் இரு அணிகளும் ஆக்ரோஷமாக போராடின. இத்தாலி அணிக்கு அலெசாண்ட்ரோ தியமன்டி (73) ஒரு கோல் அடித்தார். பின் அசத்திய உருகுவேயின் எடின்சன் கவானி (58, 78) இரண்டு கோல் அடிக்க, நிர்ணயிக்கப்பட்ட நேர முடிவில் போட்டி 2-2 என்ற கணக்கில் சமநிலையை எட்டியது. கூடுதல் நேரத்தில் கோல் எதுவும் அடிக்கப்படாததால், ‘பெனால்டி ஷூட்’ முறையில் முடிவு நிர்ணயிக்கப்பட்டது.

இதில், இத்தாலியின் அனுபவ கோல்கீப்பர் மற்றும் தலைவரான புபான் அருமையாக செயற்பட்டார். உருகுவேயின் போர்லான், கேசராஸ், கர்கானோ ஆகிய 3 பேர் அடித்த கோலை தடுத்து, அணிக்கு வெற்றி தேடித் தந்தார். இதில் இத்தாலி 3-2 என்ற கணக்கில் வென்று 3ஆவது இடத்தை பிடித்தது.

# △ சுற்றில் தீவுகள் ‘திரில்’ வெற்றி

மேற்கிந்தியத் தீவில் நடைபெறும் இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் மோதும் முக்கோண சுற்றுப் போட்டியில், இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவு அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் ‘திரில்’ வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்ப ஆட்டக்காரர்களாக ரோகித் ஷர்மா, ஷிகர் தவான் ஆகியோர் களம் இறங்கினார்கள். அதிரடி ஆட்டக்காரர் ஷிகர் தவான் ஏமாற்றம் அளிக்கும் வகையில் 10 பந்துகளில் 2 பவுண்டரியுடன் 11 ஓட்டங்களும், அடுத்து களம் கண்ட விராட்கோலி 11 ஓட்டங்களும், தினேஷ் கார்த்திக் 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக ரோகித் சர்மா 60 ஓட்டங்களும், சுரேஷ் ரெய்னா 44 ஓட்டங்களும் எடுத்தனர்.

இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.

எட்டக்கூடிய இலக்கை துரத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்ப வீரர் கெய்ல்(11) ஏமாற்றினார். அடுத்து வந்த டேவன் ஸ்மித்(0), சாமுவேல்ஸ்(1) நிலைக்கவில்லை. பின் இணைந்த ஜான்சன் சார்லஸ, டேரன் பிராவோ ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டனர். முதலில் புவனேஷ்வர் வேகத்தில் ‘ஹெடரிக்’ பவுண்டரி அடித்த சார்லஸ், ஜடேஜா பந்தில் இரண்டு சிக்சர் பறக்கவிட்டார். எதிர்முனையில் டேரன் பிராவோ ஜடேஜா பந்தில் தலா ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார்.

நான்காவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 116 ஓட்டங்களை சேர்த்த போது டேரன் பிராவோ (55) அஷ்வின் ‘சுழலில்’ சிக்கினார். பின் வந்த தற்காலிக அணித் தலைவர் பொலார்டு (4), ராம்டின் (4) ஆகியோர் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுபுறம் அஷ்வின், உமேஷ பந்துகளை சிக்சருக்கு அனுப்பிய சார்லஸ், அரைசதம் கடந்தார். இவர 97 ஓட்டங்கள் எடுத்தபோது உமேஷ் யாதவ் வேகத்தில் வீழ்ந்தார்.

சமி(29) ஓரளவு கைகொடுத்தார். அடுத்து வந்த நரைன்(5) ஆட்டமிழக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி 220 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. பின் வந்த பெஸ்ட் கைகொடுக்க, எதிர்ப்புறம் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரோச், அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

47.4 ஓவரில் மேற்கிந்தியத் தீவுகள் 9 விக்கெட்டுகளை இழந்து 230ஓட்டங்களை எடுத்து ‘திரில்’ வெற்றி பெற்றது.

பங்கேற்ற இரண்டு போட்டியிலும் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது.



## பொன்டிங் ரி.வி. வர்ணனையாளராக

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் ‘ருவென்ரி-20’ தொடருக்கு பின், சகல கிரிக்கெட்டில் இருந்தும் விடைபெற உள்ள அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கிப் பொன்டிங் தொலைக்காட்சி வர் ணனையாளராக மாறவுள்ளார். இதற்காக அவுஸ்திரேலியாவை சேர்ந்த தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்று பொன்டிங்கை வர்ணனையாளராக ஒப்பந்தம் செய்துள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதம அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ‘பிக் பாஷ் ருவென்ரி-20“ தொடரின்போது, தொலைக்காட்சி வர்ணனையாளராக கடமையாற்றவுள்ளார். இதுகுறித்து பொன்டிங் கூறுகையில்,

வர்ணனையாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. வரும் டிசெம்பர் நடைபெறவுள்ள ‘பிக்பாஷ்’ தொடருக்காக மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறேன் என்றார்.

# 2017 இல் டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி

மினி உலகக் கிண்ணப் போட்டிக்குப் பதிலாக முதல் உலக டெஸ்ட சம்பியன்ஷிப் போட்டி 2017ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இங்கிலாந்தில் நடைபெற்ற ஐசிசி வருடாந்தக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக ஐசிசி வெளியிட்டுள்ள அறிக்கையில், முதல் உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் போட்டி இங்கிலாந்தில் 2017ஆம் ஆண்டு ஜூன் - ஜூலை மாதங்களிலும், இரண்டாவது டெஸ்ட் சாம்பியன் ஷிப் போட்டி இந்தியாவில் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி - மார்ச் மாதங்க ளிலும் நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டுள்ளது.

**வங்கதேசத்துக்கு கெடு**

2014இல் ஐசிசி இருபது ஓவர் உலகக் கிண்ணப் போட்டி பங்களா தேசில் நடைபெறவுள்ளது. அதற்காக மைதானங்கள் சீரமைக்கும் பணி உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் அனைத்தையும் வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் முடிக்குமாறு பங்களாதேசுக்கு காலக்கெடுவிதித்துள்ளது ஐசிசி.

**பந்தின் தன்மையை மாற்றினால் 5 ஓட்டங்கள்**

இதேபோல் போட்டியின்போது பந்துவீசும் அணியினர் பந்தை சேதப்படுத்தியோ, வேறு வகைகளிலோ பந்தின் தன்மையை மாற்றினால், துடுப்பாட்டம் செய்யும் அணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்படும். ஒரு வீரர் பந்தை சேதப்படுத்தியது தொடர்பாக எவ்வித ஆதாரமும் இலலாதபட்சத்தில் சம்பந்தப்பட்ட அணியின் தலைவர் எச்சரிக்கப்படுவார்.

துடுப்பாட்ட வீரர்கள், பந்தை தேவையில்லாமல் மாற்றுமாறு கூறினால, அது தொடர்பாக களத்தடுப்பு அணியின் தலைவர் புகார் செய்யலாம் என்பது உள்ளிட்ட பல வேறு புதிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த புதிய விதிமுறைகள் அனைத்தும் வரும் ஒக்டோபர் முதல் நடைமுறைக்கு வரும.

**4 ஆண்டுக்கு ஒரு முறை**

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு உலகக் கிண்ணப் போட்டியும் 4 ஆண்டுக்கு ஒரு முறையே நடத்தப்படும். தற்போது இருபது ஓவர் உலகக் கிண்ணம் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. அதுவும் இனிமேல் 2016இற்குப் பின்பு 4 ஆண்டுக்கு ஒரு முறையே நடைபெறும். இருபது ஓவர் உலகக் கிண்ணப் போட்டி 2014 இல் பங்களாதேசிலும், 2016 இல் இந்தியாவிலும் நடைபெறுகினறன. அதன்பின்பு 4 ஆண்டுக்கு ஒரு முறை தான் நடத்தப்படும்.

**இந்தியாவில் 3 உலகக் கிண்ணங்கள்**

இந்தியாவில் 2016ஆம் ஆண்டு இருபது ஓவர் உலகக் கிண்ணமும், 2021இல் டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியும், 2023இல் 50 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியும் நடைபெறவுள்ளன.

இதில் இருபது ஓவர் உலகக் கிண்ணம் மற்றும் டெஸ்ட் சம்பியன்ஷிப் இந்தியாவில் முதனமுறையாகவும், 50 ஓவர் உலகக் கிண்ணப் போட்டி இந்தியாவில் 4ஆவது முறையாகவும் நடைபெறவுள்ளது.

இதேபோல் 2019இல் 50 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியை இங்கிலாந்தும், 2020இல் இருபது ஓவர் உலகக் கிண்ணப் போட்டியை அவுஸ்திரேலியாவும் நடத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகளை கடத்தும் அபாயம் காணப்படுகிறது

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நல்லாட்சி முழுமையாக சீர்குலைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மற்றும் அரச சேவை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. பௌத்த மதத்தை பற்றி நூல் எழுதுவது கூட குற்றச் செயலாக்கப்பட்டுள்ளது.

மாநாயக்கத் தேரர்கள் உள்ளிட்ட பௌத்த பிக்குகளை தூற்றுகின்றார்கள் என்ற ஏனைய மதத்தவர்களை இந்த ஏகாதிபத்திய அரசாங்கம் எவ்வாறு கவனிக்கும் என்பதனை சொல்ல வேண்டியதில்லை.

பௌத்த மதத்தைப் பற்றி பௌத்த பிக்குகள் நூல் எழுதினாலும் வெள்ளை வானில் கடத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

பௌத்த மதம் பற்றி நான் எழுதிய நூல் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தினால் அவர்களுக்கு பொலிஸார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனை தெளிவு படுத்தி அனுப்பி வைப்பேன் என ரணில் குறிப்பிட்டுள்ளார். கண்டியில் வைத்து அவர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார். (எ-11)

# தொண்டர் ஆசிரியர்கள் பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இதுவரை நியமனம் கிடைக்கப் பெறாத தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் சுகாதார தொண்டர்கள் ஆகியோர் தமது விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 11 ஆம் திகதிக்கு முன்பதாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றும் அனைவரையும் குறித்த திகதிக்கு முன்பதாக ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.தலைமை அலுவலகத்தில் வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (எ-6)

# வடக்கு மாகாண சபை நாட்டை துண்டாக்கும்

## ஹெல உறுமய சந்தேகம்

(காலி)

வடக்கில் மாகாணசபை செயற்பட அனுமதித்தால் அது தனி நாடொன்றை உருவாக்கி இலங்கையை துண்டாடி விடும் என்று ஜாதிக ஹெல உறுமய அச்சம் தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு மாகாணசபை கிடைப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாநாட்டில் தமிழீழம் என்பதுதான் தமது இலக்கு என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அவ்வாறான நிலையில் அவர்கள் கையில் மாகாண சபை அதிகாரம் கிடைத்தால் அதனைக்கொண்டு தனி நாட்டுக்கான வழியை தேடிக்கொள்வார்கள்.

அதனைத்தான் நாம் எதிர்க்கிறோம் என்றும் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், மாகாணசபையை ஆதரிக்கும் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித, மாகாண சபைகளின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப் படாவிட்டால் பேரைவாவியில் மட்டும்தான் மீன்பிடிக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-11)

# அஷ்கர் மைதானத்தில் திடீர் புத்தர் சிலை

வாழைச்சேனை ஓட்டமாவடி கல்வி அலுவலகப் பிரிவில் உள்ள பிறைந்துரைச்சேனை அஷ்கர் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில்திடீர் என புத்தர் சிலை இருந்ததால் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவிலிருந்தே இந்த புத்தர் சிலை இங்கு வைக்கப்பட்டுள்ளதாக அபிவிருத்திச் சங்கத்தினர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

பிறைந்துரைச்சேனையில் உள்ள அஷ்கர் வித்தியாலயம் மற்றும் சாதுலியா வித்தியாலயம் என்பவற்றுக்குள்ள ஒரே விளையாட்டு மைதானம் இம்மைதானமாகும். இம் மைதானம் வாழைச்சேனை புத்தஜயந்தி விகாரைக்கு அருகில் அமைந்துள்ளது.

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்ச்சிகள், பிரதேச விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டப் போட்டிகள், கலை கலாசார நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்று வந்தன.

விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள புத்தஜயந்தி விகாரையின் விகாராதிபதியால் 2010ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி சுற்றுமதில் உடைக்கப்பட்டு இக்காணி புத்தஜயந்தி விகாரைக்குரிய காணி என்றும் இதற்குள் வெளியாட்கள் எவரும் விளையாட வரக்கூடாது என்றும் அறிவித்தார்.

இது தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தால் வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு 11 தவணைகள் இடம்பெற்றதன் பின்னர் நீதிமன்றத்தால் விகாரைக்குரிய இடம் அல்ல என்று பாடசாலை மைதானம் என்று சுட்டிக்காட்டி 2013ஆம் ஆண்டு ஜூன் 25ம் திகதி தீர்ப்பளிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை மீண்டும் புத்தஜயந்தி விகாரையின் விகாராதிபதியினால் மைதானத்தின் நடுவில் மேசையின் மீது புத்தர் சிலை ஒன்றை வைத்துள்ளதனால் குழப்பம் அடைந்த பாடசாலை நிர்வாகம் வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (எ-11)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சச்சிதானந்தம் [இந்திரன்]



(உதவி ஆணையாளர்
சுதுமலை தெற்கு மானிப்பாய் - அல்லைப்பிட்டி)

யாழ்ப்பாணம் சுதுமலை தெற்கு காலஞ்சென்ற பண்டிதர் ஆ.சி.நாகலிங்கம் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், அல்லைப்பிட்டி காலஞ்சென்ற உடையார் செல்லத்துரை சொர்ணம்மா தம்பதிகளின் மருமகனுமாகிய நாகலிங்கம் சச்சிதானந்தம் அவர்கள் 28.06.2013 அன்று லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நடேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதுமலை விவாகப் பதிவுகாரர் J.P ஞானசம்பந்தன் அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜபுவநேஸ்வரன் J.P (இலங்கை வங்கி முகாமையாளர், கொழும்பு), விவேகானந்தன் (தலைவர் விவேகானந்தசபை கொழும்பு) அவர்களின் உடன்பிறவா சகோதரரும், பவானி (லண்டன்), சிவானந்தன் (லண்டன்), கஜவல்லி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரன் (லண்டன்) சத்தியபாலினி (லண்டன்), காலஞ்சென்ற உருத்திரகுமார் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தவவிநாயகம் (அல்லைப்பிட்டி கிராமத்தலைமைகாரர் கிராமசபைத் தலைவர்), ஞானசம்பந்தன் தையல்நாயகி (சுதுமலை), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (வர்த்தகர் மட்டக்களப்பு), காலஞ்சென்ற சிவயோகலட்சுமி, நடேசபிள்ளை (தொழிலதிபர் 2-ம் வட்டாரம் அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற விநோதினி (கொழும்பு), மிதிலாதேவி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், கிருஷ்ணாம்பாள் (பிரான்ஸ்), இராசம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்ற இரட்ணசபாபதி (உபதபால் அதிபர், அல்லைப்பிட்டி), மங்கையற்கரசி (2-ம் வட்டாரம், அல்லைப்பிட்டி) ஆகியோரின் சகலனும், சங்கரன், ஹரிகரன், சிவசக்கரவர்த்தி, பத்மஸ்ரீ, சுவர்ணஸ்ரீ, லக்ஷிமிஸ்ரீ, சரவணன், ஸ்ரீதேவி, சம்பத்குமார், அருள்நேசன் ஆகியோரின் அன்புப் பேரனும், தனுஷ்காவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 04.07.2013 வியாழக்கிழமை லண்டன் நேரப்படி 1.00 மணிக்கு இடம்பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P : 0212255764 - யாழ்ப்பாணம்
லண்டன்
சிவானந்தன் (மகன்)
- 004407424446902
ஸ்ரீதரன் (மருமகன்)
- 004407944177319
கஜவல்லி (மகள்)
- 004407440118473

தகவல் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
ந.ஞானசம்பந்தர் J.P
(முன்னாள் விவாகப்பதிவாளர்)
அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
செ.நடேசபிள்ளை - மைத்துனர்

(3164)

# பொருளாதார அபி...

தெரிவித்தார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீசெல்சுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கைக்கு இந்த சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகம் ஒருமைப்பாட்டு செயன்முறைக்கான உதவிகளை கொடுக்கமுடியும். போருக்கு பின்னரான சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுக்காமல் இல்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத்தின் மீது ஆர்வம் கொண்ட பிரிவினர் பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியை குறைத்து மதிப்பிடுவதற்கும் சர்வதேச ரீதியில் எங்களை அவமானப் படுத்துவதற்கு முயற்சிக்கின்றன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (எ-11)

# அரசுக்கு அழுத்தம்...

கொழும்பில் எதிர்வரும் 7ஆம் திகதி இடம்பெறவுள்ள பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்புக்கு வரவுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராக அமைச்சர் பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 4ஆம் திகதி புதுடில்லி செல்லவுள்ளார்.

அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டமூலத்தை நீர்த்துப் போகச் செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கத்தின் இந் நடவடிக்கைகள் குறித்து கவலையும் அதிருப்தியும் கொண்டுள்ள இந்தியா, இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவே பசில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு அழைத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரை பசில் ராஜபக்ஷ புதுடில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அதேவேளை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையோ, காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியையோ அவர் சந்திப்பாரா என்பது தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை.

இந்நிலையில் சிவ்சங்கர் மேனன் கொழும்புக்கு விஜயம் செய்வதற்கு முன், பசில் ராஜபக்ஷ மூலம் கடுமையான செய்தி ஒன்றை கொழும்புக்கு அனுப்பவே அவரை இந்திய மத்திய அரசு அழைத்துள்ளதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கோட்ட அதிபர் கூட்டம் இன்று

நல்லூர்க் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று 2-ந் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர்க் கோட்ட அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (ந)

## றெமிடியஸ்...

பெற்று மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன்.

தமிழத் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டில் அதிருப்தி கொண்ட காரணத்தினால் கடந்த 2010-ம் ஆண்டு தொடக்கம் யாழ் மாநகர சபையில் தனித்து செயற்பட்டு வந்தேன்.

எதிர்க்க வேண்டிய விடயங்களுக்கு எனது எதிர்ப்பையும் ஆதரவு வழங்க வேண்டி விடயங்களுக்கு ஆதரவினையும் வழங்கி வந்த நான், கடந்த 2 வாரமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றேன்.

எனவே அக்கட்சியில் அங்கத்துவம் பெறுவதற்காக நான் பொறுப்பேற்றிருக்கும் மாநகர சபை உறுப்பினர் பதவியையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பதவியையும் நேற்று திங்கட்கிழமையுடன் இராஜினாமா செய்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## விடுதலைப்புலிகள்...

முடிந்து, ஒத்திவைக்கப்பட்ட தீர்ப்பு நேற்று திங்கட்கிழமை சென்னையில் வெளியிடப்பட்டது.

நீதிபதிகள் எலிபி தர்மாராவ், எம்.வேணுகோபால் ஆகியோர் அடங்கிய அமர்வு "விடுதலைப்புலிகள் இந்தியாவில் பல கொடிய செயல்களைப் புரிந்திருக்கின்றனர். அவர்களது தமிழீழத்தில் இந்தியாவில் சில பகுதிகளும் அடங்கும். எனவே தடை நீட்டிப்பு செல்லும்" என்று தீர்ப்பளித்திருக்கிறது.

எப்படியும் தீர்ப்பாயம் புதுடில்லியில் நிலைகொண்டிருந்ததால் அதன் முடிவின் மீது தீர்ப்பளிக்கும் உரிமை சென்னை உயர்நீதி மன்றத்திற்கு இல்லை எனக்கூறி, தடை நீட்டிப்பு செல்லும் என்ற தீர்ப்பிற்கெதிரான மனுக்களை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

இதனிடையே 2012ல் மீண்டுமொருமுறை விடுதலைப்புலிகள் மீதான தடை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அதனை எதிர்த்தும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பள்ளி...

இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

## இலங்கையுட...

படைத்தளபதி ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கயானி கடந்த சனிக்கிழமை தியதலாவையில் அமைந்துள்ள படைத்துறை பயிற்சி முகாமிற்கு விஜயம் செய்து பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறும் படையதிகாரிகளின் பிரியாவிடை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு கூறியுள்ளார். (எ-11)

## பிரமுகர்...

மாறு உத்தரவிட்டுள்ளேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு தூதரகங்களின் ஒத்துழைப்புடன் அதி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இவ்வாறு பிரபுக்களின் செல்லிடப்பேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## நிசாந்தன்...

டார் சைக்கிளை அபகரித்துக் கொண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் நோக்கி ஓடியுள்ளார்.

நிசாந்தன் பின்தொடர்ந்து சென்று தனது மோட்டார் சைக்கிள் அபகரிப்பு சம்பந்தமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்றபோது, அங்கு அவர் பிரதான வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் யாழ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபசாரத்தில் ஈடுபட்டதாகக் கூறி, குறித்த விடுதியில் அத்துமீறி நுழைந்த யாழ்.பிரதேச செயலாளர் மற்றும் நிசாந்தன் ஆகியோர் அவ்விடுதியில் இருந்த ஜோடியொன்றை பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக குறித்த விடுதி உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்.

அம்முறைப்பாட்டின் அடிப்படையில், முன்னாள் மாநகரசபை உறுப்பினர் சி.நிசாந்தனைக் கைது செய்துள்ளதாகவும் இவரை யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா மேலும் தெரிவித்தார். (எ-11)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P: 021 321 0815, 021 567 1540

**தளபாடங்கள் விற்பனைக்கு**

முன்னணி நிறுவனம் ஒன்று நவீனமயப்படுத்தப்பட்டதால் அதன் சில காலம் பாவித்த கணனி மேசை, Revolving Chairs, Excecutive Chairs நியாயவிலையில் விற்பனைக்குண்டு. (C-3835)

தொடர்புகளுக்கு:- 0217904941

**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் சந்தைப்படுத்தல் நிறுவனம் தனது புதிய கிளையினை வவுனியாவில் ஆரம்பித்துள்ளது. கிளிநொச்சியிலும் ஆரம்பிக்க இருப்பதால் இக் கிளைகளிற்கு
விற்பனைப் பிரதிநிதிகள்
சந்தைப்படுத்தல் துறையில் அனுபவமுள்ள மேற்பார்வையாளர்கள் தேவை
அனுபவமற்றவர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்படும்.
ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (3165)

தொடர்புகளுக்கு:- 0774301972, 0771079573, 0778330074 (வவுனியா)

**உடனடி வேலைவாய்ப்பு**

[20 பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவர்]

சர்வதேச ரீதியில் 10,000 கிளைகளை கொண்டிருக்கும் Innovege Multinational Companyக்கும், அதன் வட மாகாண கிளைகளுக்கும் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.





- Sales Supervisor
- Sales Distributors
- Innventory
- Management trainee
- Account

குறிப்பு:-
- அனுபவம் அவசியமற்றது
- தங்குமிட வசதி இலவசம்
- சர்வதேச ரீதியிலான பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படும்
- ஆங்கில & சிங்கள வகுப்புக்கள் இலவசமாக நடைபெறும்
- உணவு & தங்குமிட வசதி இலவசம்
- வயதெல்லை :- 18 - 35

(C-3837)

தொடர்புகளுக்கு :- (Karthi - 0777981471), (Srikanth - 0770771377)

**விந்தை - வியப்பு - ஆரவாரமாக**
**திசைகாட்டி அறிமுகப்படுத்தும் இத்தாலி விசா ஆலோசனை**
(6 பேருக்கு மட்டுமே)

**100% சட்ட ரீதியாகச் செல்ல சட்ட ஆலோசனை**
**(6 வாரத்தில் சாத்தியமாகும்)**

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 0215689090 (C-3824)

**வேலைவாய்ப்பு**

வடக்கு வாழ் இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரியவாய்ப்பு. நீங்கள் (O/L) சாதாரணதரம் படித்தவர்களா? தன்னிச்சையாக செயற்படக் கூடியவரா? விடாமுயற்சியுடன்கூடிய நேர்மைத்தன்மை உள்ளவரா?

உங்களுக்காகவே DYNAMIC MARKETING தனது கிளையை யாழ். நகரில் திறந்து முதல் மாத வெற்றியில் தனது 2ஆவது கிளையையும் திறந்துள்ளது.

தனது கிளைகளை பன்முகப்படுத்தும் நோக்கில் துடிப்புள்ள 25 இளைஞர், யுவதிகளுக்கு வேலை தர முன்வந்துள்ளது.

◆ தங்குமிட வசதி, உணவு இலவசம் (3166)

தொடர்புகளுக்கு: 0776546218, 0770878555

**தொழிற் பயிற்சிகள்**

**Mobile Phone Repairing**
சகல Phone களின் Hardware, Software கள் செயன்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும் (காலம் 3 மாதம்)

**Electronics**
றேடியோ, ரெலிவிசன் DVD மற்றும் இலத்திரனியல் பொருட்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் (காலம் 10 மாதம்)

**Air - Conditioning**
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை, பராமரிக்கும் முறை பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

**Electrical Wiring** (காலம் 3 மாதம்)
வீட்டுமின்சுற்று வேலைகள் Single Phase, Three Phase Wiring, வீட்டு மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

**Rewinding**
மின்விசிறி, Motor, Transformer, Three Phase Motor கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

பயிற்சிகள் ஆரம்பம் - 06.07.2013
மேலதிக விபரங்களுக்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE**
No.23 பலாலி வீதி, (அப்பலோ ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P:- 0778249949

குறிப்பு:- 01, வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிடவசதிகள் செய்து கொடுக்கப்படும்.
02, பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.
(C-3833)


# மரண அறிவித்தல்

## அப்பாத்துரை இராமலிங்கம்



யாழ்ப்பாணம் பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் நோர்வேயினை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை இராமலிங்கம் 01.07.2013 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற ஆசிரிய சிரோன்மணி அப்பாத்துரை அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசிரியர் சரவணமுத்து பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் (நோர்வே) அன்புக் கணவரும், லக்ஸ்மிதுரை (நோர்வே), மாதுமை (நோர்வே) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், புனிதவதி, ஞானசோதி (கனடா), சிவக்கொழுந்து (ஓய்வுநிலை தாதி உத்தியோகத்தர்), கிருஸ்ணமூர்த்தி, காலஞ்சென்ற மணிவாசகர், கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நமசிவாயம், ஜெயரட்ணராஜா, சிவரஞ்சினி, ரேணுகாதேவி ஆகியோரின் மைத்துனரும், ரமணனின் (கனடா) அன்பு மாமாவும், மணிவாசகரின் பெரியப்பாவும், கனகரசன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர் நாயகம்), காலஞ்சென்றவர்களான சரஸ்வதிதேவி, தண்டியன் ஆச்சி, அருளம்பலம் மற்றும் தபேந்திராதேவி (ஓய்வுநிலை தாதி உத்தியோகத்தர்), ஞானேஸ்வரி (கனடா), வேலாயுதர் (கனடா), கேதீஸ்வரன் (கனடா), நடேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். (3167)

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பண்ணாகத்திலுள்ள அவரது இல்லத்தில் 02.07.2013 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்.
*தகவல்:* குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org